www.tamilarangam.net



# சிகரங்களைத் தொட்ட பின்னும் இன்றும் பெண்...

இருமனங்கள் இணைந்து நடைபெறும் திருமணங்கள் மூலம் அமையப்பெறும் குடும்பங்கள் கணவன், மனைவி இருவராலுமே கொண்டு நடத்தப்பட வேண்டும். அங்கு எடுக்கப் படும் தீர்மானங்கள் அனைத்தும் புரிந்துணர்வின் அடிப்படையில் இருவராலும் மேற்கொள்ளப்படுவதாகவே அமைய வேண்டும். இருவரும் சமமே மதிக்கப்பட வேண்டும். ஆனால்..

ஆணையே தலைவனாகக் கொண்டியங்கும் குடும்ப அமைப்பைக் கொண்டது எமது சமூகம். ஒரு வீட்டில் ஆணே சகலதையும் தீர்மானிப்ப வனாகிறான். அவனே சகலதுமாகிறான். சிறு வயதிலிருந்து தனது தந்தையே உணரத் தலைப்படவில்லை. தனது தாய் தனது தந்தையினதும், தமையனினதும், தம்பியினதும் உணவு தொடர்பான விருப்பு வெறுப்புகளுக்கு முன்னுரிமை கொடுப்பதையும் வீட்டிலுள்ள ஆண்களே முதலில் உண்ண வேண்டும் எனும் எழுதப்படாத சட்டம் ஒன்று பேணப்படு வதையும் சிறு வயதிலிருந்தே அறிந்து வரும் பெண் அவ்வழியிலேயே தானும் செயற்படுவாள்

கணவனே முதலில் உண்ண வேண்டும், அவனுக்கே சிறந்தது அனைத்தும் படைக்க வேண்டும் எனும் பெண்ணின் மனப்போக்கும், வீட்டில் என்ன இருக்குது இல்லை என அறியாமலேயே தான் உணவருந்திவிட்டுச் செல்லும் அல்லது மகனது முடிவுக்காகக் காத்திருக்கும் சந்தர்ப்பங்கள் பல உண்டு.

ஷகர்ப்பப்பை இறக்கம் எனும் உடல்நலக்குறைபாட்டுடன் வந்த இருபெண்கள் கூறிய வார்த்தைகள் என்னை வேதனைப்படவைத்தன. அப் பெண்கள் இருவருமே நடுத்தர வயதைத் தாண்டியவர்கள். இருவருமே இவ் உடல்நலக்குறைப்பாட்டினால் பல உடல் உபாதைகளை அனுபவிப்பவர்கள் உடன் தீர்க்கப்படவேண்டிய அவ்வுபாதைகளுக் காகவே மருத்துவரை நாடிவந்திருந் தார்கள். மேற்கொள்ளப்படக்கூடிய ஒரேயொரு இலகுவான சிகிச்சை முறையை வைத்தியர் கூறியபோது இருவரது தயக்கமும் பதிலும் திகைப்பையே அளித்தது. ஒரு பெண் ஷஇவரைக்கேட்கவேணும். பேசுவர்



உணவிலிருந்து எதையும் தீர்மானிப் பவனாக இருப்பதைப்பார்த்து வரும் ஒரு பெண், தன்னியல்பாகவே தீர்மானங்க ளுக்காக ஆணை எதிர்பார்க்கும் மனநிலைக்கு உள்ளாகிறாள். தந்தையும் பின்னர் தமையனும், பின்னர் கணவனும், பின்னர் தனயனும் கூட அவளுக்கான முடிவுகளை எடுக்க அப்பெண்ணும் அதுதொடர்பான எவ்வித மறுப்புணர்வு மின்றி அவர்களின் ஆளுகைக்குள் உட்படுகிறாள். தாமே சிந்தித்து

**- கு. தீபா -**

சுயமே முடிவெடுக்கும் ஒரு சில பெண்கள் கூட ஆண் தன்மை கொண்டவர்களாகவே வர்ணிக்கப்படுகின்றனர்.

ஒரு வீட்டில் ஆணின் ஆதிக்கம் உணவு விடயத்தில் ஆரம்பமாகிறது. ஷஎன்னப்பா சமையல் செய்யிறது?' எனும் மனைவியின் அங்கீகாரத்துடன் இது ஆரம்பமாகும். ஒரு சில குடும்பங்களில் பிள்ளைகளின் விருப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்தாலும் கணவனின் விருப்பு பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் அவை மேலதிகமாகவே அமையும். பிள்ளைகளில் கூட ஆண் பிள்ளைகளின் விருப்பிற்கே முக்கியத்துவம் கொடுக்கப் படும். வீட்டில் கணவனில்லாத சந்தர்ப்பங்களில் ஷஅவரில்லைத்தானே இருக்கிறதைச் சாப்பிடுவோம் என்ற முடிவு பெண்ணின் மனோபாவத்தைத் துல்லியமாகக் காட்டி நிற்கிறது.

மதியம் ஒரு மணிக்கு அரிசியில் நெல் பொறுக்கிக் கொண்டிருந்த பெண்ணொரு விடம்ஷஷஎன்னணி இப்ப நெல் பொறுக்கி எப்ப சமைச்சுச் சாப்பாடு கொடுக்கப் போகிறீர்கள்'என்று கேட்டபோது ஷஷதம்பி இரண்டு மணிக்கு வந்திடுவான். அதுக்கிடையிலை நான் சமைச்சிடுவன்' என்ற பதிலில் வீட்டிலிருந்த மகள் கருத்திலெடுக்கப்படவில்லை என்பது புரிந்தது. அந்தத் தம்பி எத்தனை வயதுடையவனாக இருந்த போதும் அவனது பசியே கருத்தில் கொள்ளப் படுவது வேதனையான உண்மை.

மாதம் மாதம் இயற்கையான குருதியிழப்பிற்குள்ளாகும் இளம் பெண் எதிர்காலத்தில் தாயாகவும் மனைவியாகவும் பொறுப்புக்களைச் சுமப்பதற்கும் பிள்ளைப் பேறு மூலம் ஏற்படும் குருதி இழப்பு, உடற்பல இழப்பு என்பவற்றை ஈடுசெய்யவும் அவள் சிறந்த உடல் நலம் உள்ளவளாகப் போசிக்கப்பட வேண்டும் என்பதைப் பெரும்பாலான தாய்மார்

கணவனின் மனப்போக்கும் மாற்றப்பட வேண்டும். சேர்ந்திருந்து இருப்பதைப் பகிர்ந்துண்ணும் பழக்கம் பெரும்பாலான நமது குடும்பங்களில் இல்லாதிருப்பதும் இம்மனப் போக் கிற்கு ஒரு காரணமே.

உடை என்பதும் பெரும்பாலான பெண்களின் மீது திணிக்கப்பட்ட ஆணின் தீர்மான மாகவே காணப்படு கிறது. தனது உடல் நிலை, மன நிலைக்கேற்ப தான் எவ்வாறு உடை அணிய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அவளுக்கு மறுக்கப்படுகிறது. பெரும்பாலும் கணவனும் சில வேளைகளில் சகோதரர்களுமே அதைத்தீர்மானிப்பவர்களாக இருக்கி றார்கள். ஷஅண்ணாவுக்கு பிடிக்காது, அவருக்குப் பிடிக்காது' என்ற வாசகங்களின் பின் தமது ஆற்றாமையை மறைத்துக் கொண்டு உலாவருகிறார்கள் பல பெண்கள். அவ்வாற்றாமை இயலாமையாக, பொறாமையாக, ஏக்கமாகப் பல பெண்களில் உருவெடுப் பதையும் அவதானிக்கலாம் ஷபொம்பிளை இப்படித்தான் இருக்க வேண்டும் எனும் பண்பாட்டுக் கோலமொன்றை வரைந்து உடும்புப் பிடியாக பற்றிக் கொண்டிருக்கும் ஆணின் விருப்பிற்கேற்ப, தனது இயல்பு நிலைக்கு மாறாக, ஷஇவருக்கு நான் இப்பிடி உடுப்புப் போடுறதுதான் விருப்பம், இவருக்கு நான் இப்பிடிப் பொட்டு வைக்கிறதுதான் விருப்பம்' என்று பெருமையாக வெளியில் கூறிக் கொள்ளும் பெண்களின் உள்மன ஏக்கங்கள் ஆழங்காணமுடியாதவை. தனது கணவனைத் திருப்திப்படுத்துவதற்கான இவ்வியல்பான ஆர்வத்தை ஆண்கள் மேலும் துஷ்பிரயோகம் செய்து மேலும் தமது திணிப்பை மேற்கொள்கின்றனர். தான் ஆசைப்பட்டதை நிறைவேற்ற முடியாத பெண், தன் இயல்பு நிலைக்கேற்ப வாழமுற்படும் இன்னொரு பெண்ணை ஷபொம்பிளை இப்பிடியே நடக்கிறது'என விமர்சிக்க முற்படுவது அவளின் ஆதங்கத்தின், இயலாமையின், ஏக்கத்தின் வெளிப்பாடு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்

தனது உடல்நலக் குறைபாடு களுக்கான சிகிச்சைக்குக் கூட ஒரு பெண் முடிவெடுக்கத் தயங்கி கணவனது

என்றார். அடுத்த பெண் - ஷஷமகன் வவுனியா போட்டார். வந்த பிறகு கதைச் சிட்டுத்தான் சொல்லுவன்'' என்றார். ஆணின் முடிவுகளுக்காகக் காத்திருப் பதில் ஏற்படும் விளைவுகள் உணர்த்தப் பட்டபோதும் கூட அவர்களின் தயக்கம் ஒன்றையே உணர்த்தியது. இதுவரை காலமும் தங்களுக்கான எந்த முடிவையும் தீர்மானித்து அப்பெண்களுக்குப் பழக்கமில்லையென்பதே.

கணவன் மனைவி இருவராலுமே இணைந்து தீர்மானிக்கப் பட வேண்டிய குழந்தைப்பேறு கூட எதேச்சதிகாரமாய் ஆணாலேயே தீர்மானிக்கப்படுவதே உண்மை. பல உடல் நலக்குறைபாடுகள் உபாதைகளும், சிரமங்களுமாய் பத்துமாதம் சுமப்பவளும், வலி, வேதனை, குருதிஇழப்பு எனப் பிரசவத்தில் நொந்து போபவளும், இரவிரவாய் கண்விழித்து குழந்தையை வளர்ப்பவளும் பெண்ணாய் இருக்க, பிள்ளைகளைத் தீர்மானிப்பது மட்டும் ஆணின் கையில் இருக்கிறது. இதயமும் நுரையீரலும் எப்படி அவளுக்காகச் செயற்படுகின்றனவோ, அதே போன்ற உறுப்பான கர்ப்பப்பைக்கு மட்டும் அவளுக்காகச் செயற்படும் உரிமை யில்லை. அவளது கருவறையின் பொறுப்பாளனாகக் கணவனே உள்ளான் பல பிள்ளைகளைப் பெற்றுக் களைத்து, நிரந்தரமாக கருத்தடை செய்ய ஆர்வத்துடன் விபரம் கேட்கும் பெண், ஷஅவருக்கு விருப்பமில்லை' என முகத்தை தொங்கப் போட்டவாறே கூறும் சம்பவங்கள் பல.

அவருக்காகவே வாழ்ந்து வெளியிட முடியாப் பல ஏக்கங்க ளுடனேயே இறந்து போகும் பெண்கள் தங்களுக்காகவும் சிறிது வாழ முற்பட்டால் என்ன? தனக்காகவும் உண்டு, தனக் காகவும் உயிர் வாழ்ந்து, தனக்காகவும் சிந்தித்து பெண் வாழப்போவது எப்போது?

# நீங்களும் இரவும் நாங்களும்

ஓடிக்கொண்டிருக்கும் நேரத்தை பிடிக்க
விரைந்து கொண்டிருக்கும் எங்களை மறித்து
உங்களின் கரங்கள் நீளும்
நிற்போம்
"அண்ணை நானும் வரட்டா? "
என்பீர்கள்
வாயில் வார்த்தை எதுவுமே வராது போவோம்
ஏதேனும் சிந்தனையில் மூழ்கி நாங்கள்
ஒரு கணம் நிதானம் இழந்து போனால்
"டிம்" இல்லையோடா?
என்று திட்டுவீர்கள்.
சிரிப்பும் கவலையும் சேர்ந்தே வரும்

பாதுகாப்பாக பீரங்கிகளை நிலைப்படுத்தி
எண்ணியெண்ணி எறிகணை செலுத்திய
கலங்கள்லிகிபோக
எதிரிகள் ஓடும் வேகத்திற்கேற்ப
எறிகணை செலுத்திகளை நகர்த்தும்
வாகனங்களைச் செலுத்தும் வல்லமை பெற்ற
சகோதரிகளினுடைய சகோதரர்களே,
இரவிலே வாகனங்கள் செலுத்தும் அனைவரும்
ஆண்களாகத்தான் இருப்பார்கள் என்று
எப்படி உறுதியாகத் தீர்மானிக்கின்றீர்கள்?
உங்களின் எழுதாத சட்டங்களைத்
தூக்கி எறிந்து விட்டு
தயவு செய்து கவனியுங்கள்.
நாளைக்கு உங்கள் அக்கா
Hiace செலுத்திச் செல்லக்கூடும்
உங்களது கடைசித் தங்கை
Passion இல் பறத்தல் நேரும்
கப்பற் தொகுதிக் கட்டளைத் தளபதியாய்
மருமகள் பிறத்தல் ஆகும்
தமிழீழத்தில் ஓர் நல்ல விமானியாய்
பெறாமகள் இருத்தல் நிகழும்
சட்டங்கள் பெற்றாலும் சுதந்திர தமிழீழத்தில்
வேலையில்லாச் சிக்கலிற்குள்
சிக்காது உங்களது
புதல்வியால் கூட வீதிப் புனரமைப்பில் ஈடுபடும்
கனரகங்களை கன கச்சிதமாய்ச்
செலுத்த முடியும்
உருளச் சிரமப்படும் உலகத்தை
ஒற்றை கையால்
உருட்டப் போகும் உங்களது
பேத்தியின் பெருமை காணும்
பேறு உங்களுக்கு இருத்தல் நல்லது.

எமதருமை உறவுகளே.
இனியேனும் வாகனங்களை மறிக்கும் போது
பொதுப்பெயரில் விளித்துதவி கேளுங்கள்.
உறவுப்பெண்களாயிருந்தால் உந்துருளிகளிலும்
ஏனையவர்களானால் ஏனைய வாகனங்களிலும்
இடமிருந்தால் நிச்சயம் உதவுவார்கள்

நேற்றும் இன்றும் நாளையும்
ஒருபோதும் ஒன்றாக இருக்க முடியாது
என்பதுடன்
இது
சூரியனின் புதல்விகள் உலவும் தேசம்.

**- நிலா -**

# மறுபடி நிகழும்



பாணனுக்குப் பரிசாகப் போன சிறு நிலமே, யாழ்ப்பாணமே.

விடுதலை உணர்வின் வேரையும் வீரியத்தையும் அக்கினிக்குஞ்சாக எப்போதும் தன் மடி சுமக்கும் பனங்காமத்து வன்னிமையே, பெரு நிலமே.

ஒரு வயிற்றில் பிறந்த இரு சகோதரி போலவே உங்களிலும் எத்தனை வேறுபாடு.

நினைத்ததெல்லாம் நடக்க வேண்டும் என்ற அடமும், எவரோடும் சட்டென ஒட்டுவதும், அதே வேகத்திலேயே வெட்டுவதுமான துடுக்குத்தனமும் கொண்ட இளையவள் போன்றவள் யாழ்ப்பாணம்.

நினைத்ததைச் செய்வதற்கான காலம் வரும்வரை காத்திருக்கும் பொறுமையும், மனிதர்களை மிகச்சரியாக எடைபோட்டு அவரவர் இயல்புக்கேற்ப அவர்களைக் கையாழும் நிதானமும் திறமையும் பொறுப்புணர்வும் கொண்ட மூத்தவள் போன்றவள் வன்னிமை.

அவள் அழகானவள்.

இவள் அமைதியானவள்.

பார்ப்பவரை ஈர்ப்பவளாக இளையவளே இருந்தாலும், எல்லோருடைய மதிப்புக்கும் உரியவளாக எப்போதும் மூத்தவளே இருப்பதுண்டு.

எங்களுக்கும் இடையிடையில் சின்னவளோடு முறுகல் வரும். புறப்பட்டு மூத்தவளிடம் வந்து விடுவோம். அட! நாங்கள்தான் என்று இல்லை. சங்கிலியன் காலத்திலேயே அப்படித்தானாம். அவரும் ஒருமுறை தன் படையை அழைத்துக் கொண்டு மூத்தவளின் வீட்டுக்கு வந்து விட்டார்.

சின்னவளுக்கு மனிதர்களை எடை போடும் நுட்பம் தெரியாது. சிரித்தபடி யார் வந்தாலும், நல்லவர்கள்தான் அவளுக்கு. வீட்டிலுள்ளவர்களிடம்தான் அவளுக்கு வாய். வெளியாட்களிடம் தேன்தான். வருபவர்களுக்கும் அவளை விட்டுப்போக மனம் வராது. அவளின் முகமறியாதவர்களும் அவள் பற்றித் தாமறிந்த கதைகளால் ஈர்க்கப்படுவர். கப்பலைக் கட்டிக் கொண்டாவது புறப்பட்டு விடுவர்.

போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே இதே சிக்கல்தான். அதற்கு முந்தைய

**– மலைமகள் –**

கதைகள் எனக்குத் தெரியவில்லை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், ஆரியர்கள் என்று எல்லோருமே வந்த சில நாட்களிலேயே தம் சொந்த முகங்களைக் காட்டி அவளைப் புண்ணாக்க, கோபத்தில் கொதித்தெழும்பிச் சிலிர்க்கும் தன் மக்களை மூத்தவளிடம் அனுப்பிவிடுவாள்.

அவளுக்குத் தெரியும் அவர்களுக்கு அதுவே பொருத்தமான இடம் என்று. அவளுக்குத் தெரியும் அவர்களே தனது மீட்பர்கள் என்று. அவளுக்குத் தெரியும் தன்னுடனான அவர்களின் ஊடல் நிலையானதல்ல என்று. அவளுக்குத் தெரியும் தன்னிடம் வராமல் அவர்களால் இருக்க முடியாது என்று.

சின்னவளின் பிள்ளைகளிடம் மூத்தவளுக்கு பற்று அதிகம். தன்னிடம் இருப்பவற்றையெல்லாம் வாரிக் கொடுப்பாள். தனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் சொல்லிக் கொடுப்பாள். வாரிக் கொடுத்தாள். சொல்லிக் கொடுத்தாள்.

விளையாட்டுப் பிள்ளைகளாய் வருபவர்களையும் வீரத்தின் பிள்ளைகளாய் மாற்றும் வலிமை பெரியவளிடம் உண்டு. வீரர்களாக வருபவர்களையும் உரசி உரசி மேலும் கூர்மையானவர்களாய் ஆக்கும் வலிமை பெரியவளிடம் உண்டு. மாற்றினாள். ஆக்கினாள்.

நாம் உரம் பெற்றோம் 1987 இல் வந்தபோது. நாம் உரம் பெற்றோம் 1996 இல் வந்தபோது. ஒரு தடவை போல இன்னொரு தடவை இருப்பதில்லை.

●●●

கடைசியாகச் சின்னவளை நாம் 1996 இல் விட்டு வந்தோம். அடங்காச் சினத்தோடு வந்த எமக்கு கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் நகர்ப்புறப் போர்முறையைப் பழக்கினாள் பெரியவள். தன்னிடமிருந்த இரகசியங்களை எல்லாம் எமக்குச் சொன்னாள். மணலாற்றிலிருந்து பனங்காமத் தொங்கல்வரை காட்டுச் சண்டை பழக்கினாள். காட்டின் மர்மங்களை காட்டித் தந்தாள்.

நுளம்புகளை எதிர்க்கும் வலிமையை, மலேரியாவை வெல்லும் மனோபலத்தை, பசியை, பனியை, பகலவனை வெல்லும் பெரும் பலத்தைத் தந்தாள். எதுவுமே இல்லாமல் வாழும் வாழ்வை, கிடைப்பவற்றை மிகச் சரியாகப் பயன்படுத்தும் வாழ்வை, இயற்கையோடு இணைந்து வாழும் வாழ்வை எங்களுக்குப் பழக்கினாள். புறப்படும் போதெல்லாம் பூரிப்போடு வழியனுப்பினாள். வழியனுப்பினாள்.

பொன்னேரியில் விரையும் படகுகளில் அமர்ந்தபடி அவளுக்குக் கையசைத்தோம். பகைவனின் பிடியில் சிக்கி வேலிகளுள்ளும் மதில்களின் பின்னாலும் பதுங்கிக் கிடந்த இளையவளுக்கு சிறகுகளைச் சுமந்து சென்றோம். வழியனுப்பினாள்.

●●●

கைதடிப் பகுதிச் சண்டையெல்லாம் கடுமையானதுதான். வெளியான பகுதியில் பகைவர்களின் கடுமையான எதிர்ப்பின் நடுவே முன்னோக்கி ஓடினோம். விழ விழ ஓடினோம். எவரும் நிற்கவில்லை. வீழ்ந்தவர்கள் எல்லோருமே ஒரே விடயத்தைத்தான் சொன்னார்கள்.

“என்னை ஒருதரும் பாக்க வேண்டாம். விடாதை பிடி”

காயங்களோடும் பாரங்களோடும் முன்னோக்கி ஓடிக் கொண்டிருந்தவர்களின் காதுகள் ஒரே ஒரு கட்டளையையே உள்வாங்கிக்கொண்டன.

“விடாதை பிடி”

வீழந்தவர்களின் கட்டளை அது.

வீழும் போது தாம் வழங்க வேண்டிய கட்டளையும் அதுவே.

“விடாதை பிடி”

லெப்ரினன்ட் அன்பினி, 2ம் லெப்ரினன்ட் தாயகி, 2ம் லெப்ரினன்ட் சிவமதி.

எல்லோரது கட்டளைகளும் கைதடி - நாவற்குழி வெளியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. கைதடிச் சந்தியில், நாவற்குழிப் பாலத்தின் தொடக்கத்தில், முடிவில் அமைக்கப்பட்டிருக்கும் பகைவர்களின் காப்பரண் சுவர்களோடு மோதி மோதி ஒலிக்கின்றன அவர்களின் குரல்கள்.

“விடாதை பிடி”

●●●

காற்று ஊவென்றிரைந்தது. அவர்களுக்குப் பயமாயிருக்கவில்லை. பரிதாபமாக இருந்தது. எத்தனை உயிர்கள் இந்த வெளியில் போயின. இவர்கள் இருக்கின்றார்களா, இல்லையா என்று அறிய வழியின்றி எத்தனை உயிர்கள் நித்தமும் வேகுகின்றன.

எங்கே புதைத்திருப்பார்கள்? தலை வாசல் பிள்ளையாருக்குப் பின்னாலா? முன்னாலுள்ள வயல் வெளியிலா? அல்லது எம் காலடியிலேயா?

கால்கள் கூசின. மண்வெட்டியை ஓங்கி நிலத்தைக் கொத்தக் கைகள் கூசின.

அவலத்தோடு கொலையுண்டவர்களினது சாவின் பின்னரான அமைதியை நாம் கலைத்து விடப் போகின்றோமா?

‘‘உறவுகளே, எங்களை மன்னியுங்கள்’’

ஓங்கிய மண்வெட்டியோடு ஒவ்வொரு முறையும் அள்ளுண்ட மண்ணில் எவரது எச்சங்களுமே இல்லை என்று உறுதி செய்தவாறே செம்மணி வெளியில் நிலையமைத்து முடிப்பதற்குள் மனதால் களைத்து விட்டோம். இன்னும் எத்தனை பேரை இப்படி இழக்கப் போகின்றாய் யாழ்ப்பாணமே?

அன்றைய சண்டை பெருஞ்சண்டை. விழுதெறிந்த ஆலமரக் கூடலுள் அமைக்கப்பட்டிருந்த தன் காப்பரணில் நின்றவாறு நிலைமையை நிதானமாகக் கணிப்பிட்டாள் மேஜர் சீத்தா. வலமும் இடமுமாக வயல் வெளிக்குள் அமைக்கப்பட்டிருந்த ஏனைய காவல் நிலைகள், ஏற்கனவே மழைநீரில் ஊறிக்கிடந்த காவல் நிலைகள் பகைவரின் கடும் எறிகணை வீச்சால் பொத பொதத்து விழ, காயமடைந்தவர்கள் உடன் நின்றவர்களின் வித்துடல்களைச் சுமந்தவாறு விலகுவதைத் தவிர, வேறு வழியே இருக்கவில்லை.

எல்லோரையும் வெளியேறும்படி பணித்தாள் சீத்தா. எல்லோரையும் அனுப்பிவிட்டு, தன் காப்பரணில் தனித்து நின்றாள் சீத்தா. கூட நின்றவள் காயப்பட, அவளையும் போகுமாறு கண்டிப்பாகப் பணித்து விட்டு தனித்து நின்றாள் சீத்தா.

‘‘தனியாக நிற்கவேண்டாம். உடனேயே பின்னுக்கு வா’’

என்ற கட்டளைப் பீடத்திற்குப் பணிய மறுத்து, தனித்து நின்றாள் சீத்தா.

‘‘நிறைய ஆமி வாறான். என்னை அவங்களுக்குத் தெரியேல்லை. எனக்கு அவங்களைத் தெரியுது. என்னட்டை 40மி.மீ ஷெல்லும் இருக்குது. ரைபிளும் இருக்குது. இப்ப இவங்களை விட்டா பிறகு அடிக்கிறது கஸ்ரம். நான் அடிபடப் போறன்’’

புதையுண்டு போயிருந்த நானூறு பேருக்குமாக சீத்தா போரிட்டாள்.

கடைசி நிமிடத்தில் உயிர்த்துளிக்காக பகைவரிடம் இறைஞ்சிய அவலக் குரல்களையே அதுவரை சுமந்த காற்று,

“நான் வரமாட்டன். அடிபடப் போறன்’’

என்ற சீத்தாவின் குரலைச் சுமந்து வீசத் தொடங்கிற்று. தலைவாயிற் பிள்ளையாரின் உடைந்த கோயிற் சுவருடன், அரைப்பனை உயரத்தில் நிமிர்ந்து நிற்கும் விளம்பரப் பலகையுடன் மோதி மோதி வீசும் காற்றில் அந்தக் கம்பீரமான குரல் எதிரொலிக்கின்றது.

“இப்ப இவங்களை விட்டா, பிறகு அடிக்கிறது கஸ்ரம்’’

●●●

அது எமது கடைசிச் சண்டை. பலத்தைப் பெருக்குவதற்காய் பெருநிலத்திடம் மறுபடி வந்தோம். எங்கள் பெரும் பலத்தை தீச்சுவாலை எதிர் நடவடிக்கையில் காட்டியதால், அதற்கு முன் வந்த வெற்றி நிச்சயம் படையினரைத் தடுத்து வல்லமை காட்டியதால், கூண்டோடு கலைத்துக் கொடியேற்றியதால் திறந்த நெடும் பாதை வழியே மறுபடி உன்னிடம் வந்தோம் யாழ்ப்பாணமே.

திறந்த நெடும் பாதை வழியே உன்னிடம் வந்தோம் தலைநகரமே.

திறந்த நெடும் பாதை வழியே உன்னிடம் வந்தோம் வாவி நகரே.

●●●

பாணனுக்குப் பரிசாகப் போன சிறு நிலமே,

தாயக நீள் நிலத்தின் சிறு துளியே,

வருவோம்.

மறுபடி வருவோம்.

அடையாள அட்டைகளைக் காட்டியதாய் அல்லாமல், இனத்தின் அடையாளத்தை, வீரத்தின் அடையாளத்தை, தாயகத்தின் தனித்துவ அடையாளங்களைச் சுமந்ததாய் நிகழும் அந்த வருகை.

எமது கடல் எமது வயல்
எமது வெளி எமது குளம்
எமது நிலம் எமது வனம்
எமது நதி எமது சனம்
எமதெனவே எமதெனவே
எமதெனவே எமதெனவே

(நன்றி நிலாந்தன்)

என்ற பாடலை இசைத்தபடி, கொடியைச் சுமந்தபடி, தாயகத்தின் தனித்துவ அடையாளங்களைச் சுமந்தபடி

மறுபடி வருவோம் தலைநகரமே.

மறுபடி வருவோம் வாவிநகரே.

மறுபடி வருவோம் யாழ்நிலமே.

●

www.tamilarangam.net



# சாணைபோட மறு... வேன்று ...

‘டேய் வல்வைப் பெட்டை வந்து வன்னியிலை கலக்குதடா’ என்று பலர் சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள், இல்லாவிட்டால் அறிந்தாவது இருப்பீர்கள் தானே? இப்படியாக எல்லோரினது வாய்க்கும் ‘அல்வா’ கொடுத்து, தனது பெற்றோருக்கும், பாடசாலைக்கும் மட்டுமல்லாமல் இந்த வன்னி மண்ணிற்கே பெருமையைத் தேடித்தந்த அக்கராயன் மகா வித்தியாலய மாணவி செல்வி தாரணி சீவரெட்ணம் அவர்களைச் சந்தித்து உரையாடவென பாடசாலைக்குச் சென்றிருந்தேன்.

வானம் வரை நெடிதுயர்ந்த கட்டடங்கள் என்றில்லாவிட்டாலுங்கூட, தன் பாடசாலைக்கேயுரிய மிடுக்குடன் நிமிர்ந்து நின்றன அங்குள்ள கட்டடங்கள். இல்லையில்லை ஒரு கட்டடத்துடன் கூடிய கொட்டில்கள்! அவைதான் மாணவர்களின் வகுப்பறைகளும் கூடவாம்!!

பாடசாலை வளாகத்தினுள் சென்ற நான் அதிபரின் அறையை அண்மித்து, அனுமதி பெற்று உட்சென்று, நான் அங்கு சென்றதற்கான காரணத்தைக் கூறவும், அதிபர் அருகில் நின்றிருந்த ஒரு மாணவனிடம், ‘‘தம்பி, தாரணியை ஒருக்கா வரச் சொல்லுங்கோ’’ கம்பீரமான குரலில் கனிவாக கட்டளையிடுகிறார்.

இரண்டு நிமிடங்களிருக்கும் அறைவாசலில் ஒரு மாணவி. சாதரணமாக ஒரு பாடசாலை மாணவியைப் போன்றே தோற்றமளித்த அவரை, உன்னிப்பாக அவரது நடை, உடை, பாவனை என்பவற்றைப் பார்க்கும் பொழுது ஒரு துடுக்குத்தனத்துடன் கூடிய மிடுக்குடன், கம்பீரமாகத் தோற்றமளித்தார்.

மாணவி தாரணியையும் என்னையும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைத்த அதிபர், நான் சென்ற விடயம் பற்றிக் கூறவும், மெல்லியதாக ஒரு புன்னகை மட்டுமே சிந்தினார்; அந்த பதின்மூன்று வயதேயான (சாதனை) மாணவி!
பின் எமக்குள் நாமிருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகமாகியதும் எனது உரையாடலைத் தொடர்ந்தேன்...



பெற்றோருடன் தாரணி

**ⓘ உங்களுக்கு இந்த விளையாட்டுத் துறையில் ஆர்வம் ஏற்பட்டது எப்படி? சிறுவயதிலிருந்தே இப்படியான விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருகிறீர்களா?**

எனது இந்த விளையாட்டுத் துறையின் மீதான ஆர்வத்திற்கு முதல் காரணம் எனது பெற்றோர்தான். குறிப்பாக தந்தை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் தற்போது அவர் சிறந்ததொரு விளையாட்டு வீரராக இல்லாதிருந்தும், என்னை சிறந்ததொரு விளையாட்டு வீராங்கனையாக வளர்க்க முன்னின்று பாடுபட்டு இன்று இந்த நிலைக்கு உயர்த்தியுள்ளார். அவரின் விளையாட்டு முன்னெடுப்புகளும், விடாமுயற்சிகளுமே எனக்கு ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந்தது.

‘படிப்பு மட்டும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு தேவை என்று இல்லை, விளையாட்டும் அவசியம்தான்’ என்று அடிக்கடி எனது தாயார் கூறுவதும் இன்றைய இந்த நிலைக்கு காரணமாக இருக்கலாம்.

இப்படியான, இவர்களின் தூண்டுதலின் பெயரில்தான் எனது சிறுவயதிலிருந்தே விளையாட்டுக்களில் ஈடுபட்டு, ‘வெற்றிக்கிண்ணங்களைப்’ பெற்று வருவது குறிப்பிடக்கூடிய விடயம்.

**ⓘ தற்பொழுது நீங்கள் விளையாடும் விளையாட்டுக்கள் பற்றி...?**

தற்பொழுது குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டியெறிதல் ஆகிய மூன்று விளையாட்டுக்களிலுமே ஈடுபட்டு வருகிறேன். இருந்தும் எனது சிறுவயதில் பாடசாலை மட்டத்திலிருந்து மாவட்ட, மாகாண மட்டம் வரைகூட 100m, 400m, 800m போன்ற ஓட்டங்கள் ஓடி பரிசில்களை வென்றுள்ளேன். அதாவது அப்போதெல்லாம் ஓட்டங்களில்தான் என் ஆர்வமிருந்தது.

**ⓘ அப்படியானால், தற்போது ஏன் ஓட்டங்களில் ஈடுபடுவதில்லை? உங்கள் ஆர்வம் திசை திரும்பியதற்கான காரணம் என்னவென்று கூறமுடியுமா?**

ஓட்டங்களின்போது வெற்றிக் கிண்ணங்களையே பரிசில்களாகப் பெற்ற நான், குறிப்பிட்ட வயதை அடைந்ததும் ஓட்டங்களில் பங்குபற்றுவதன் மூலம் பரிசில்கள் பெறுவது குறைவடையும் என்பதாலும், எனது பெற்றோர்தான் விளையாட்டை மாற்றியமைப்பதன் மூலம் (தற்போது நான் விளையாடும் விளையாட்டுக்களில் எனக்கு ஆர்வமிருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம்) எனது திறமையை வலுப்படுத்தலாம், ஒரே விளையாட்டிலேயே எனது திறமை இருப்பதைத் தவிர்த்து, வேறு பல விளையாட்டுக்களிலும் எனது திறமை வெளிக்கொணரப்பட வேண்டுமென்று அயராது பாடுபட்டவர்கள். அவர்களுக்குத்தான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.
என்று கூறிவிட்டு, புன்னகைத்த அவரிடம் தொடர்ந்து...

**ⓘ உங்களுக்கு ஊக்கமளித்திருந்தது பெற்றோர்தான் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். பாடசாலையில், உங்களின் இந்த முயற்சிகளுக்கு ஊக்கமளித்த ஆசிரியர்கள் பற்றிக் குறிப்பிட்டுக் கூறமுடியுமா?**

குறிப்பிட்டுச் சொல்வதானால் எமது பாடசாலையில் விளையாட்டுத் துறைக்கென்று ஒரு ஆசிரியர் இது வரையிலும் இல்லை என்பதுதான் உண்மை. இருந்தபோதிலும் எமது பாடசாலையில் விளையாட்டுத்துறை ஆசிரியர், அதாவது இந்த தேசிய மட்ட போட்டிகளிற்கு செல்வதற்கு முன்னர் எனக்கு பயிற்சி அளிப்பதற்கு ஒரு விளையாட்டுத் துறை ஆசிரியர் இல்லையே என்ற குறையை, பாடசாலை அதிபரும், எனது தந்தையாரும் இணைந்து கல்விப்பணிப்பாளருக்கு




கடிதமூலம் தெரியப்படுத்தி வேறு பாடசாலைகளிலிருந்து இரண்டு ஆசிரியர்களைத் தருவித்து எனக்கு பயிற்சி அளித்ததன் மூலம் ஓரளவு நிவர்த்தி செய்தனர்.

அதாவது தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு செல்வதற்கு பத்து நாட்கள் முன்புதான் இவ்வாறான பயிற்சிகள் அளிக்கப்பட்டதை குறிப்பிட வேண்டும். போதிய பயிற்சியும், கால அவகாசமும் கிடைத்திருக்குமானால் தேசிய மட்டத்தில் எனக்கு தங்கப் பதக்கமே கிடைத்திருக்க வாய்ப்புண்டு.

**ⓘ அதாவது உங்கள் பாடசாலையில் நிரந்தரமாக ஒரு விளையாட்டுத் துறைக்கென ஆசிரியர் இருந்திருந்தால், மூன்று விளையாட்டுக்களிலுமே தங்கப்பதக்கத்தைப் பெற்றிருப்பீர்கள். அப்படித்தானே?**

ஆமாம். நிச்சயமாக, நாளாந்தம் குறிப்பிட்ட நேரம் வரையறுத்து பயிற்சி பெற்றிருந்தால், தேசியமட்ட போட்டிகளில் தங்கப் பதக்கத்தை மட்டுமல்ல, வெற்றிக்கிண்ணத்தையே பெற்றிருப்பேன்.

முக்கியமாக குறிப்பிட்டு சொல்ல வேண்டிய விடயம் என்னவெனில், எமது பாடசாலைக்கென நிரந்தரமாக ஒரு உடற்கல்வி ஆசிரியரை நியமிப்பதன் மூலம், இனிவரும் இப்படியான போட்டிகளின் போது பரிசில்களைச் சுலபமாக பெற்றுக் கொள்வதற்குரிய கடுமையான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள உதவியாயிருக்கும்.

**ⓘ பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டியிலிருந்து, தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிக்கு சென்றது வரையிலான நீங்கள் பெற்ற பரிசில்களையும், நிலையையும் கூறுங்களேன்?**

பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டியின் போது குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டியெறிதல் ஆகிய மூன்று விளையாட்டுக்களிலும் 1ம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டேன்.

அடுத்து கோட்டமட்டத்திலும், அதற்கடுத்து மாவட்ட மட்டத்திலும் அவ்வாறே வெற்றிக் கிண்ணங்கள் எனக்கே கிடைக்கப் பெற்றது மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது.

மாகாண மட்ட போட்டியின் போது, தட்டெறிதலில் பரிசில் பெறத் தவறி குண்டெறிதலிலும், ஈட்டியெறிதலிலும் 2ம் இடங்களைப் பெற்றேன்.

கடைசியாக தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியின் போதுதான், ஈட்டியெறிதலில் 5ம் இடத்தையும், குண்டெறிதலின் போது 3ம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுக் கொண்டேன்.

என்று கூறிய அவரின் முகம் மிகவும் பிரகாசமாக; சந்தோசமடைந்தவராகக் காணப்பட்டார். அந்தக் கணத்திலேயே அவரிடம்...

**ⓘ அவ்வாறு அந்த வெண்கலப்பதக்கத்தைப் பெறும் போது, அந்தக் கணப்பொழுது உங்கள் மனநிலை எவ்வாறிருந்தது?**

திடீரென உற்சாகம் ஊற்றெடுக்க, “எங்கே நிற்கிறேன் என்றே தெரியாத ஒரு நிலையில் உணர்ச்சி வசப்பட்டு நின்றேன். ஆச்சரியம் கலந்த உண்மை ஒன்று நிஜமாவதைக் கண்டு உடல் புல்லரிக்க பரிசிலைப் பெற்றுக்கொண்டேன்.

அப்பொழுது என் மனதினுள், “என்னைப் போன்றே எம் மண்ணிலிருந்து பலர் வந்து இப்படியான பரிசில்களைப் பெறவேண்டும்’ என்றொரு ‘அவா’ ஏற்பட்டதையும் உணர்ந்தேன்”

- கார்முகில் -

**ⓘ அப்படியாயின், உங்கள் வயதொத்த ‘பெண்’ பிள்ளைகளுக்கு இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

அதாவது நான் மட்டும்தான் இப்படியான விளையாட்டுக்களில் பங்குபற்றி பரிசில்களைப் பெறமுடியும் என்றில்லை. அவர்களாலும் முடியும். பரிசில்களைப் பெறும் தகுதி எத்தனையோ பேர்க்கு இருந்தும் அதை வெளிக்காட்டாமல் இருப்பவர்களுக்கு நான் ஓர் எடுத்துக்காட்டாகவே இருக்க விரும்புகிறேன்.

மேலும், அவர்களும் இது போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டு, எம் மண்ணிற்கு பெருமை சேர்க்க வேண்டுமென்றும், ‘பெண்களால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை’ என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**ⓘ இவ்வாறு பெண் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறும் உங்களின் வகுப்பு சக மாணவர்களின் மனநிலை, நீங்கள் இந்தப் பதக்கத்தைப் பெற்று வந்தபோது எவ்வாறிருந்தது?**

மிகவும் சந்தோசமாக என்னை வாழ்த்தினார்கள். தமது வகுப்பிற்கே பெருமையான விடயம் இதுவெனவும், மேன் மேலும் தமது வகுப்பில் மட்டுமல்லாது, தமிழீழமெங்குமே பெருமையோடு பேசப்படும் ஒருவராக நான் வளர வேண்டுமென்றும் வாழ்த்துக் கூறினர்.

15ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இராணுவத்தின் பாதுக மக்களின் பாதுகாப்பின்

சமாதான மழை பத்து மாதமாகத் தொடர்ந்து பெய்கிறது. மழை என்னவோ தொடர்ந்துதான் பெய்கிறது. ஆனால் விதைக்கப்பட்டவைகள் தான் இன்னும் முளைத்து நாற்றாகவில்லை.

நாற்றேதும் முளைக்காததால் பெய்யும் மழை யாருக்கும் மகிழ்வூட்டவில்லை. சந்தேகச் சப்பிகள்தான் மெல்ல முளைவிடத் தொடங்கி விட்டன. வெள்ளம் பற்றிய அச்சம் மெல்லத் தலையெடுக்கிறது.

இடைக்கால நிர்வாகம் செயலணியாகி உபகுழுவாகியபோதும் கூட சமாதானம் புலிகளால் அதிக பொறுப்புணர்வோடும் சிரத்தையோடும் அமைதிக்கேயுரியதான அனுகுமுறையோடும் நிதானமாக முன்னெடுக்கப்படுகிறது எனும் நிலையே உணரப்பட்டது.

ஆனால், காஞ்சிரங்குடா படுகொலை, திருமலைப்படுகொலை, தமிழீழத் தேசியத்தலைவர் மீதான சிறிலங்காவின் உயர்நீதிமன்றத்தீர்ப்பு, நெடுந்தீவில் கடற்படையின் பொலிஸ் பாதுகாப்புடன் ஈ.பி.டி.பி இனரின் தரையிறக்கமும் மக்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகமும் என இவையெல்லாம் நல்ல சமிக்கைகளாகத் தமிழர் தரப்புக்கு இருக்கவில்லை.

இத்தகைய நிலையிலும்கூட தாய்லாந்தில் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் சுமூகமாக - குறிப்பாக புலிகள் தரப்பின் சகிப்புணர்வுடன் கூடிய அணுகுமுறை பேச்சை வெற்றிகரமாக நகர்த்தியிருந்தது.

ஆனால், இராணுவ உயர்பாதுகாப்பு வலய ஆராய்வுக்காக அமைக்கப்பட்ட உபகுழுக்கூட்டங்கள் இரண்டுமே அடுத்த கட்டத்திற்கான சிறுநகர்வைத்தானும் செய்ய முடியாது அதிருப்தியுடன் முடிவடைந்தன. எனவே அதன் முதல் முயற்சிகள் தோல்வியுடன் முடிவடைந்தன என்று சொல்வதில் தவறேதும் இல்லை.

பத்து மாதச் சமாதானப் பாதையில் இயல்பு வாழ்க்கையே தமிழ்மக்களுக்குக் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிவதாயில்லை. தெற்கில் இருந்து பலநூற்றுக்கணக்கில் நாள் தோறும் வடக்கு நோக்கி வரும் சிங்கள மக்களால் மன நெருக்குவாரமின்றி, அச்சுறுத்தல் எதுவுமின்றி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினூடாகப் பயணிக்கவும், தங்கவும் முடிகிறது.

இது பற்றி ஜேர்மன் 'ஸ்ரார்' தொலைக்காட்சியின் செய்தியாளர் வன்னி வந்தபோது கேட்டார் ''இங்கு துப்பாக்கியுடன் திரியும் புலிகளையோ அல்லது துப்பாக்கி வைத்திருக்கும் காவல்துறையினரையோ காணமுடிவதில்லை. புலிகளின் இராணுவப் பிரிவையே தான் இங்கு கண்டிருக்க வில்லை. ஆனால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியினூடாக நான் பயணிக்கும் போது அங்கு நிலைமை அவ்வாறிருக்க வில்லை'' என ஆச்சரியம் கலந்த தொனியில் வினாவினார்.

போராடும் மக்கள் சமுதாயத்திலும் கூட புலிகள் அரசியல் நிர்வாக நடவடிக்கை களை விரிவாக்கம் செய்து வைத்துள் ளார்களே தவிர இராணுவக் கலாச்சாரத்தை விதைத்து வைத்திருக்கவில்லை.

ஆனால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் நிலைமை வேறு. யாழ்ப்பாணத்தில் வீதியால் பயணிக்கும் ஒருவர் நிமிடத்திற்கு ஒரு இராணுவ வாகனத்தைக் கடக்க வேண்டியுள்ளது. ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் ஒரு காவலரணைக் கடக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு சந்தியிலும் ஒரு இராணுவ மினி முகாமைக் கடக்க வேண்டியுள்ளது. இயல்பாகச் சொன்னால் இராணுவத்தினரைச் சந்திக்காமல் கோவிலுக்கோ, பாடசாலைக்கோ, கடைக்கோ, சந்தைக்கோ, அலுவலகத்திற்கோ போகமுடிவதில்லை.

தம்மீது யுத்தம் புரிந்த, தம்மைப் படுகொலை செய்த, தம்மை ஆக்கிரமித்துள்ள, துப்பாக்கியுடன் தம்மைச் சோதனையிடும் ஓர் அந்நிய மொழியைப் பேசும் இராணுவப் பிரசன்னத்திற்குள் வாழும் தமிழ் மக்கள் எப்படி இயல்பான வாழ்வை அனுபவிப்பது. எப்படிச் சமாதானத்தின் மீது அவர்கள் நம்பிக்கை வைப்பது.

வெளிநாட்டிலிருந்து யாழ் சென்று வந்த ஒருவர் கூறினார் ''எனது ஊரைப் பார்க்கும் ஆவலில் வந்தேன். எனது வீட்டை, எனது பாடசாலையை, எனது கோவிலை, எனது தோட்டத்தை எதையுமே பார்க்க முடியாமல் திரும்புகிறேன். என்னுடைய அவையெல்லாம் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களாம். சுவிஸ்லாந்திலிருந்து எனை அழைத்து வந்த சமாதானம் எனக்குக் காட்டியது இதைத்தான்'' என்றார்.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட உபகுழுக்கூட்டத்தின் முடிவில் கேணல். தீபன் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது ''ஒரு வாரத்தின் முன்பே இன்றைய பேச்சில் கதைக்கப்பட வேண்டிய எமது சிபாரிசுகள் தொடர்பான விபரங்களைக் கொடுத்திருந்தோம்.



ஆயினும் படையதிகாரிகள் இவற்றிற்கு எந்த விதச் சாதகமான முடிவுகளோடும் வந்திருக்கவில்லை. அவர்கள் இதில் விட்டுக் கொடுக்கத் தயாரில்லாத மனநிலையோடுதான் வந்திருந்தார்கள்'' எனக் கூறினார்.

அரசு தரப்பில் கலந்து கொண்ட குழுத் தலைவர் ஒஸ்ரின் பெர்னான்டோ ''புலிகளின் சிபாரிசுகள் நியாயமானவை'' என்றார். ஆனால் அதில் இணக்கங்காண அவர் தயாரில்லை.

மொத்தத்தில் இராணுவம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற தனது பிரசன்னத்தைத் தளர்த்த தயாராக இல்லை. அவர்கள் அதற்கு எப்பொழுதும் தமது பாதுகாப்புப் பிரச்சினையை நியாயப்படுத்தி வருகிறார்கள். மக்களின் பிரச்சினைகள் நியாயமானாலும் கூட அவர்களுக்குத் தாம் ஆக்கிரமித்த பிரதேசத்தின் பாதுகாப்பே முக்கியமானதாயும், முதன்மையானதாகவும் இருக்கிறது.



**- மருதம் -**

ஆயின், அவர்கள் எப்பொழுதும் யுத்தத்தை நோக்கியே நிலையெடுக்கிறார்கள். யுத்தத்தை எதிர்கொள்ளவே சிந்திக்கிறார்கள். இராணுவம் சமாதானத்தை நோக்கி நிலையெடுத்து சாமாதானத்தை எதிர்கொள்ளத் தயாராகா விட்டால் அமைதிப் பேச்சுக்களிலிருந்து ஏதும் அர்த்தம் பிறந்து விடாது.

www.tamilarangam.net



# தீச்சுட

நேற்றுப் பெய்த மழையில் வன்னிப்புறத் தெருக்களெல்லாம் ஊறிச்சிதம்பிக் கிடந்தது. மார்கழி மாதத்திருப்பாவைக் காட்சியை வன்னிப்புறமெங்கும் காணக்கூடும். இங்கும் அதுபோல ஒருதிருப்பாவைப் பாடலடிகள் ஷஷசீர்த்த முலைபற்றி வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் நீங்காத செல்வம். நிறைந்தேலோர் எம்பாவாய்''.

ஆம். வன்னியைத் தம் வளத்தால் நிரப்பும் பசுக்கள், இன்றும் வழமைபோலத் தம் கூர்பாய்ந்த குளம்புகளால் உழக்கி உழக்கி தெருவைச் சேறாக்கி, அத்துடன் சாணியையும் கலந்து குழப்பி விட்டிருந்தன.

கன்றுகளை வீட்டில் கட்டிவைத்து விட்டு, பசுக்களை மேய்ச்சலுக்கு விட்ட கமக்காரர், பட்டிக்குள் அதிகாலை வரப்போகும் பசுக்களை அழைக்கும் கன்றுகளின் கதறல் களைக் கவனித்தவண்ணம் இருப்பார்கள்.

ஆனால் பட்டிகளில் சாணியும் நீரும் கலந்து உழக்கி உழக்கி கூழாகிப் புளித்துப்போய்க் கிடக்கும் நிலத்தில் நிற்கப் பசுக்களுக்குப் பிடிப்பதேயில்லை. அவை நன்றாக மேடிட்ட நிலத்தில் படுத்து அதையும் சேறாக்கும். கன்றுகள் நினைத்துக் கதற மடியிற் சுரக்கும் பால், இந்தச் சாணிச்சேற்றில் வழிந்தும், மெல்லிய பச்சைக்கரை போடப் பரந்து பாயும்.

இதெல்லாம் காலை பால் கறப்பதற் காக மாடு சாய்க்கச் சிறுவர்கள் வரும் வரையும்தான். அதற்குப் பின் எல்லாம் அலங்கோலமாகிவிடும்.

இந்த அருமையான தெருவுக்குள் தான் நாங்கள் காணவிருக்கும் அந்தச் சிறிய வீடும் இருக்கிறது. குடியேற்றத் திட்டக் கிராமம் அது. எனவே எல்லாம் ஒரே மாதிரியான வீடுகள்தான். ஆனாலும் இந்த வீடு சற்று வித்தியாசமாக இருந்தது. இதன் தெருப்படலை நெருக்கமான தறணி வரிச்சும் நெல்லியலம் பலும் கொண்டு கட்டப்பட்டிருந்தது. அப்படலையைத் திறந்தால் வீடுவரை இருபுறமும் வரிசையாக நடப்பட்ட குரோட்டன் செடிகளும், நித்திய கலியாணிச் செடிகளும் நிமிர்ந்து நின்றன. தெருவிலிருந்து வீட்டுக்கு

**- தமிழ்க்கவி -**

இருபத்தைந்து யார் தொலைவுதான். அதனையடுத்துள்ள நிலத்தில் மரவள்ளி ஒருமாத வயதுள்ள தோட்டமாகையால் குழைகள் மண்டிப் பச்சைப் பசேலென்றி ருந்தது. இவை தவிர மீதமான தரையெங்கும் அறுகு படர்ந்திருந்தது.

இது போராளிகள் தங்ககம். அதுவும் பெண் போராளிகளின் தங்ககம். இந்த முகாம் வழமைபோல அதிகாலை நான்கு மணிக்கே விழித்துக்கொண்டு பரபரத்தது. அடுக்களையில் ஒரு போராட்டமே நடந்தது.

உலையில் சோறு கொதித்துக் கொண்டிருந்தது. சம்பல் செய்வதற்காக தேங்காய் துருவினாள் ஒருத்தி.

ஷஷநிலம் வெளிக்குது. நான் போகப்போறன்'' என்றாள் ஒருத்தி.

ஷஷஓகோ... இண்டைக்கு கிச்சின் ரேன் செய்துபோட்டுப் போங்கோ''.

ஷஷசரி சோறு அவியுது. எனக்காக வதனி சம்பல் செய்வா. நான் செட்டிகுளம் போகவேணும்...''.

செட்டிகுளம் இங்கிருந்து சுமார் முப்பது முப்பத்திரெண்டு கிலோ மீற்றர் வரும். மிதிவண்டிப் பயணம். இப்போது புறப்பட்டால் தான் மாலையில் திரும்பலாம். பொறுப்பாளர் இதைச் சிந்தித்த பின் ''சரி நீங்க வெளிக்கிடுங்கோ, ஆரார் போறியள்'' என்றார்.

"நானும், ஜெனிற்றாக்காவும்.."

அவர்களது மிதிவண்டி கல்மடு ஆற்றிலிறங்கி மேற்கில் ஏறி மதீனா நகரூடாக இரணையிலுப்பைக்குளம் சந்திக்கு வந்தது. இங்கிருந்து பூவரசங்குளம் எட்டு மைல். அதாவது பதினைந்து கிலோ மீற்றர்.

பூவரசங்குளம் பாதை பழைய கற்பாதை. உடைந்து குண்டும் குழியுமாக இருந்ததுடன் ஒட்டு விட்ட சரளைக்கற்கள் வழியெங்கிலும் பரந்து கிடக்கும். மிதிவண்டியின் சில்லுப் பட்டதும் இடறி விடும்.

கோவிற்புளியங்குளம் பாடசாலை யடியில் நின்று சற்று இளைப்பாறினர்.

"எங்கயும் தண்ணி குடிப்பம்" என்றாள் ஜெனிற்றா. பின்நாளில் இவளே லெப்.கேணல் தணிகைச்செல்வி.

அருகில் ஒரு பட்டியில் பால் கறந்து கொண்டிருந்த முதியவர் இவர்களைக் கண்டதும், வளவுக்குள் திரும்பிச் சத்தமிட்டார்.



nyg;Nfz y;jz pfrnry t p

"பிள்ளை நாகேசு.... இஞ்சவாடி அக்காவை வருகினம்..."

அந்த வளவுக்குள் இருந்து ஒரு எட்டு வயதுச் சிறுமி ஓடிவந்தவள் இவர்களைக் கண்டதும் பாவட்டை வேலிக்குள் பதுங்கினாள். வெறும் பாவாடை மட்டும் இடுப்பில் கட்டியிருந்தாள். தலை செம்பட்டை பிடித்துப் பறந்தது. காலையில் அவள் இன்னும் முகங்கழுவ வில்லை என்பதை அவள் கடைவாயில் இழுபட்டிருந்த அழுக்குக்கோடு காட்டியது.

''வாரும் வெளியால'' என செல்லமாகக் கடிந்தபடியே குறுக்குக் கம்பு போட்டிருந்த கண்டாயத்தைக் கடந்து உள்ளே போனார்கள்.

உள்ளே வாசலில் வாழைமரம் சொரிந்திருந்த பூக்களில் தேன் உண்ணக் குளவிகள் மொய்த்தன. நாகேசு கொடுத்த பாற்செம்பைக் கொண்டு முன்னே ஓடினாள்.

இரவு மாடுகளுக்குப் போட்டிருந்த மூட்டம் இன்னும் புகைந்துகொண்டிருந்தது. அதன் மொறுமொறுத்த தணலைக் கிளறி பாற்பானையை அதில் வைத்த நாகேசுவின் தாய், பிள்ளைகள் உட்கார ஒரு மான் தோலைக் கொண்டு வந்து போட்டாள்.

புழுங்கல் காயவிடவும், சேனைப் புலவில் ஆயப்படும் உழுந்து, தட்டைப்பயறு, பாசிப்பயறு, குரக்கன் போன்றவற்றைக் காயவிடவும் என நீர் தெளித்து நீர் தெளித்து மெழுகிக்காயவிட்ட நிலம், நேற்றுப் பெய்த மழையில் நனைந்திருந்தாலும் சேறாக வில்லை.

மான் தோலில் உட்கார்ந்து பாலைக் குடித்த இருவரும் ஷஷநாங்கள் அலுவலாப் போறம் வரேக்க கதைக்கலாம்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டனர். அதற்குள் சின்னப்பையொன்றில் கொஞ்சம் சோளன் பொத்திகளைப் போட்டு ஷஷசப்பிச் சப்பி போங்கோ' என்று கொடுத்தாள் அம்மா.

ஷஷவேண்டாம்... ஒண்டுகாணும்'' என்றவாறே நளாயினி இரண்டு பொத்திகளைக் கையிலெடுத்து ஒன்றை ஜெனிற்றாவிடம் கொடுத்தாள்.

செங்கப்படை ஏற்றத்தில் மிதிவண்டி உழக்குவது மிகக் கஷ்டம். மிதிபலத்தில் ஏறிநின்றுழக்கித்தான் மேடேற வேண்டும். ஏற்றம் கடந்து குமரப்பாநகர்ச் சந்திகழிய... காடு, காடு... பயங்கரக் காடு.

குமரப்பாநகர் கழியும் போதே அந்த இறக்கத்தோடு கூடிய வளைவில் அந்த மேகக்கூட்டம் கண்ணில் பட்டது.

ஷஷயானை.. யானையள்தான்'

ஷஷச்சா ஏதும் எரிஞ்ச குறை மரங்கள் போல''

ஜெனிற்றா இப்படிச் சொல்லிக்கொண்டிருந்த போதே... முகில்களென நின்ற யானைகள் காணாமற் போயின.

துப்பாக்கியை தோளிலிருந்து எடுத்த நளாயினி அதன் பாதுகாப்பு நெம்பை விலக்கி ரவையை ரவைஅறைக்கு ஏற்றினாள்.

ஷஷகாடுவழிய போகேக்க... சேம்பரில விட்டுத்தான் போகவேணும் இது கட்டளை''.

வன்னிப்புற காடுகள் மிக நுட்பமான குறுக்குத் தெறிப்புகளைக் கொண்டன. ஷஷஇந்தா இந்த செங்கப்படைக் கிராமத்தில் தெருவில் நின்று கிழக்கே பாருங்கள். அதோ தெரிகின்ற குளக்கட்டின் மறுபுறத்தில் பூம்புகார் கிராமம். அங்கிருந்து தெற்கே இரண்டுகல் தொலைவில் சாளம்பைக்குளம் வந்துவிடும். மேற்கே தெரிகின்ற காட்டுக்கு முடிவே கிடையாது. இது மன்னாரைத் தொடுமாம்.''

நளாயினி மொலு மொலென்று பேசிக்கொண்டே வந்தாள்.

ஷஷமோடு ஆற்றையும் கதையக்கேட்டு காடுவழிய இறங்கீராதை கவனம்'' என்றாள் ஜெனிற்றா.

ஷஷஏனக்கா..'

ஷஷஎங்கயும் ரெக்கி வந்து கிடப்பான்'.

''அக்கா வேலங்குளத்தில ஒரு பள்ளிக்கூடமிருக்கெல்லே அதில கொஞ்சம் நிண்டிட்டு போவம்''

ஷஷஏன்..'

ஷஷஅந்தக் குளக்கட்டுத் தொங்கல்ல ஒரு அம்மா நெடுக ஒரு கதை சொல்லுறதெண்டு கூப்பிடுறா... இண்டைக்கு நேரத்தோடதானே போறம். கேப்பம்.''

ஷஷஇல்லை நேரம் போயிடும். செட்டிகுளத்தால திரும்பி வரேக்க பாப்பம்'

வேலங்குளம் கடந்து வரும் பெருங்காட்டையும் கடந்தால், புலவனாவூர் பூவரசங்குளம் சந்தியில் இன்னும் உடைந்தும் உடையாமலும் கிடக்கும் இந்தியப் படையினரின் பழைய தங்ககம். கடந்து வவுனியா மன்னார் வீதியில் ஏறி கிழக்கே திரும்பி ஒரு முந்நூறு யார் நடந்தால் செட்டிகுளம் செல்லும் சாலை தெற்கு நோக்கித் திரும்பும். இச்சந்தியில் திலீபன் நினைவாலய வளைவு கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும்.

கந்தப்பு கடையின் முன் செழித்துப் படர்ந்திருந்தது பல பல வண்ணங்களில் பூக்கும் நாயுண்ணிச்செடி. அது அப்போது ஊருக்குப் புதிது. இப்போது காடுகளெல்லாம் பரவி விட்ட இச்செடியை அப்போது வீட்டுமுற்றங்களில் அலங்காரமாக நடுவார்கள்.

இதிலிருந்து கொஞ்சம் பூக்களை உருவித் தன் காற்சட்டை பையில் போட்டாள் ஜெனிற்றா. அதை வழியில் தூவிக்கொண்டே நடந்தவள், கந்தப்பு கடைக்குள் நின்ற ஒருவர் வெளியே வருவதற்காக காத்திருந்தாள். சனத்தொகை கடையில் குறைந்ததும், மிதிவண்டியில் வைத்திருந்த ஷஷசுதந்திரப் பறவைகள்' புத்தகக்கட்டை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்றாள்.

ஷஷஅப்பா இதில ஒரு பத்துப் புத்தகம் இருக்கு ஆரும் கேட்டா குடுங்கோ'' என்று கொடுத்துவிட்டு செட்டிகுளம் நோக்கிச் சென்றனர்.

செட்டிகுளத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் வேலை சார்பாக அவர்கள் பயணம் இருந்தது. சுமார் ஐந்து கிலோ மீற்றரில் வருவது வாரிக்குட்டியூர். இது ஒரு அழகான கிராமம். 1948 இல் சிங்கள குடியேற்றம் செய்யப்பட்டு பின் பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தின் பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தில் ஒன்றாகப் புனரமைக்கப்பட்டது. இப்போது தான் வாரிக்குட்டி உடையாரின் பெயரை நீக்கி ஷரன் கெத் கம என்ற புதிய பெயர் சூட்டப்பட்டு புதிய வீடுகள், விகாரை, பூஜாசாலாவ எனப் புதிய தோற்றம் பெற்றது.

இப்போது அந்த வீடுகளும் கூட காடுகள் மண்டி காணாமல் கிடந்தன. எல்லாம் இதிலிருந்து ஒன்றரைக்கல் தொலைவிலுள்ள ஷகல்லாறு' குடியிருப்பின் அழிவோடு கலந்து தான் நடந்தது.

ஷகல்லாறு' 1977 இல் ஏற்பட்ட இன வன்முறைகளில் தப்பியோடி வந்த மலையகத் தமிழர்களின் புகலிடம். அமைதியாக வாழ்ந்து அலைக்கழிக்கப்பட்ட அந்த மக்கள் வன்னியின் இருண்ட வனத்திலுங்கூட அமைதியாக வாழ முடியவில்லை.

நளாயினி சொல்லிக்கொண்டே வந்தாள். ஜெனிற்றா காடுகள் மண்டிய அந்தப் பகுதியின் இருபுறமும் கவனமாகப் பார்த்த வாறே சைக்கிளோடினாள். வீதியின் இடையே வெள்ளம் பாய்ந்து மணல் குவிந்திருந்தது. எங்கோ பார்த்தபடி வந்த ஜெனிற்றாவின் சைக்கிள் மணலில் சறுக்கிவிடவே தடுமாறி விழுந்தாள். நளாயினி சட்டெனத் தன் சைக்கிளை நிறுத்தினாள்.

இதேசமயம் காட்டுக்குள்ளிருந்து துப்பாக்கியுடன் ஒருவன் ஓடிவந்தான்.

நளாயினி தன் சைக்கிளைப் போடாமலே திரும்புமுன் ஜெனிற்றா எழுந்துவிட்டாள். தோளிலிருந்த துப்பாக்கி கைக்கு மாறியது.

அதேசமயம் காட்டுக்குள்ளிருந்து ஓடி வந்த விவேகன் ஷஷஎன்னக்கா காயமோ...'' என்று கேட்டான்.

இப்போதுதான் அவனைக் கவனித்த நளாயினி ஷஷஇஞ்சை என்ன வேட்டையாடுறியளோ'' என்று கேட்டாள்.

ஷஷஇல்லையக்கா அலுவல்தான்...'' என்றவன்



லெப். கேணல். நளாயினி

மீண்டும் காட்டுக்குள்ளிருந்த ஒற்றையடிப் பாதையில் இறங்கி நடந்தான்.

ஜெனிற்றாவும் நளாயினியும் தொடர்ந்து செட்டிகுளத்தினை நோக்கி விரைந்தனர்.

கிறிஸ்தவ குளத்தருகே அமைந்தி ருந்த சனசமூக நிலையத்தில் ஒரு படிப்பகம் இயங்கி வந்தது. அங்கே ஒரு புத்தகம் கொடுத்த பின், புகையிரதப் பாதையைக் கடந்து மேற்கே பாடசாலைக்கெதிரே அமைந்த ஒரு கடையின் முன் மிதிவண்டிகளை நிறுத்தினர்.

ஷஷஅம்மா இருக்கிறாவோ...'' என்று கேட்டனர். உள்ளிருந்து நாற்பது வயது மதிக்கத்தக்க அம்மா வெளியே வந்தார். ஷஷவாங்கோ பிள்ளையள்'' என அழைத்தவர் அவர்களைப் பின்புறமாக அழைத்துச் சென்றார்.

15ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூக வாழ்விலும் மனித இனத்தின் முன்னேற்றத்திலும் தாமும் முழுமையான பங்கை வகிப்பதற்காக, அடக்குமுறைகளிலிருந்தும் பாரபட்ச நடவடிக்கைகளிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்வதற்காக உலகின் பல பாகங்களிலும் பெண்கள் போராட்டங்களை நடாத்தி உள்ளார்கள், இன்றும் நடாத்தி வருகிறார்கள்.

பாரபட்சத்திற்கும் அடக்குமுறைக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது சுரண்டல் முறையே. தேச விடுதலை, சமூக விடுதலை, சோசலிச சமுதாய முறைமையை உருவாக்குதல் என்பவற்றுக்காக தாமும் போராடுவதன் மூலமே தமது உண்மையான விடுதலையைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற உண்மையை சீனப்பெண்கள் அனுபவத்தின் வாயிலாக உணர்ந்து கொண்டனர்.

ஆரம்ப சீனாவில், சமூகத்தின் ஏனைய பிரிவினரைவிட வேலை செய்யும் பெண்களே கடுமையான அடக்குமுறைக்கும் சுரண்டலிற்கும் ஆளானார்கள். சமூகத்தில் அவர்களுக்கென ஒரு அரசியல் நிலை இருக்காததுடன் அவர்களது குடும்பங்களிலேயே அவர்கள் பாரபட்சமாக நடாத்தப்பட்டார்கள்.

பெண்கள் தமது அரசியல் விழிப்புணர்வை அதிகரித்தல், போராட்டங்களில் பங்கெடுத்தல், அவற்றுக்கு உதவுதல், பிரபுத்துவ கருத்துக்கள் மற்றும் பெண்களைக் கீழ் நிலைக்கு இட்டுச்செல்லும் பழக்கவழக்கங்களை நீக்குதல் ஆகியவற்றின் மூலமே ஆண்- பெண் சமத்துவம் எட்டப்படலாம் என்பது தெளிவாகியது. இவையெல்லாவற்றுக்கும் முதலில் ஆண்களுடன் இணைந்து அந்நிய ஆக்கிரமிப்புக்கெதிராகப் போராட வேண்டிய தேவை சீனப் பெண்களுக்கு ஏற்பட்டது. தேச விடுதலை, சமூக விடுதலைப் போராட்டங்களில் ஆண்களுக்கு நிகராக பங்கெடுப்பதன் மூலம் அவர்களிடமிருந்து தமது உரிமைகளை இலகுவாக வென்றெடுக்க முடியும் என அவர்கள் நம்பினார்கள்.

ஏற்கனவே சீனாவில் பல பெண்கள் அமைப்புக்கள் தோன்றியிருந்தாலும் அவை மாஓ சேதுங்கினது கம்யூனிச கட்சியின் தலைமையின் கீழ் வந்த பின்னரே செயற்றிறனுடையவையாக மாறின. 1921 இல் சீன கம்யூனிச கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பெண்கள் தொடர்பான விடயங்களில் கட்சிப் போராளிகள், பெண்கள் கட்சி உறுப்பினர்கள் மற்றும் கட்சியைச் சாராத அலுவலகங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் ஆகியோர் பங்கெடுத்தனர். முதல் நடவடிக்கையாக பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரசியற்கல்வி ஊட்டப்பட்டது. தொழிற்சாலை ஊழியர்கள் சம்பள உயர்வு மற்றும் தமது உரிமைகளுக்காகப்



போராட்டங்களை நடாத்தியபோது அதில் பெண்களின் விசேட கோரிக்கைகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

எல்லா இனங்களைச் சேர்ந்த பெண்களுமே புரட்சி எதிர்ப்பு இயக்கத்தினருக்கு ஆதரவு வழங்க மறுத்ததுடன் பல்லாண்டு காலமாக தம்மை அடக்கி வைத்திருந்த கன்பூசியசின் (Confucius) ஆணாதிக்க கொள்கையையும் எதிர்த்தனர். பெண்கள் இப்போது தமது பலத்தைத் தெரிந்து கொண்டார்கள், தாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதும் மக்கள் தம்மிடமிருந்து எதனை எதிர்பார்க்கின்றனர் என்பதும் அவர்களுக்கு தெளிவாகியது.

கன்பூசியசின் (Confucius) கருத்துக்களுக்கெதிரான விமர்சனங்கள் மேலும் தீவிரமடைந்து பழைய சமூகத்தால் விட்டுச் செல்லப்பட்ட பழக்கவழக்கங்கள் அருகிவர, புதிய சோசலிச சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான



உறவு புதியதொரு பரிமாணத்தைப் பெற்றது. ஷஷஆண்கள் வெளி விவகாரங்களையும் பெண்கள் வீட்டு வேலைகளையும் கவனிக்க வேண்டும்'' என்ற கன்பூசியசின் கருத்து பெண்களை மேலும் அடிமைப்படுத்துவதாக அமைகிறது என்பதை உணர்ந்துகொண்டதால் இதற்குப் பதிலாக ஆண்களும் வீட்டுவேலைகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. ஷஷபெண்கள் பிற்போக்கானவர்கள். அவர்கள் இளமையில் தமது தந்தையரிற்கும், திருமணமாகிய பின் தமது கணவன்மாரிற்கும், முதுமையில் அல்லது விதவையானால் தமது மகன்மாரிற்கும் சேவை செய்யவேண்டியவர்கள்'' என்பது போன்ற, சீனாவில் நிலவிய பிற்போக்கான கருத்துக்களுக்கெதிராக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இவை சீனப்பெண்களுடைய கருத்தியலிலும் அவர்களுடைய சமூகப் பணிகளிலும் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தியது.

யப்பானிய ஆக்கிரமிப்பிலிருந்து தமது நாட்டைப் பாதுகாப்பதற்கான போரில் கம்யூனிச கட்சிக்கு ஆதரவளிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் பதுங்குகுழி அமைத்தல், இராணுவத்துக்கு தேவையான ஆடைகளைத் தயாரித்தல் போன்றவற்றிலும் பெண்கள் ஈடுபட்டனர். ஆண்கள் அமைத்திருந்தது போன்ற தற்காப்புப்படை யொன்றையும் பெண்கள் அமைத்தனர். போரில் திறமையாக செயற்பட்ட பெண்களையே கிராமங் களில் தமது அமைப் புக்களின் தலைவர்களாக மக்கள் தெரிவு செய்தனர்.

புரட்சிக்குப் பின்னர் எல்லாத்துறைகளிலும் பல்வேறுபட்ட வேலை களில் பெண்கள் ஈடுபட் டனர். பெருந்தொகையான பெண்கள் வேலை செய்யும் வகுப்பினராக மாற்றம் பெற்றனர். முன்னர் பெண்களுக்கு பொருத்த மற்றவை என்று பலரால் கருதப்பட்ட வேலைகளிலும் தொழில்நுட்ப துறைகளிலும் கூட அவர்கள் தேர்ச்சி பெற்றனர். எண்ணெய் வயல்களிலும், நிலக்கரிச் சுரங்கங்களிலும் பணிபுரிவதற்குத் தேவையான தொழில்நுட்பங்களை தமது தோழர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். அத்துடன் பெண்கள் கல்வி, விஞ்ஞானம், சுகாதாரமும் வைத்தியமும், கலைஇலக்கியம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளிலும் ஈடுபாடுடையவர்களாக இருந்தனர்.

குளிர் நிறைந்த பனிமலைகளிலும் ஆண்களுக்கு நிகராக நின்று வேலைசெய்தனர்.

வேலை செய்யும் சீனப்பெண்கள் மீதான சமூக, வர்க்க ரீதியான அடக்குமுறை மற்றும் சுரண்டல் முறையை சோசலிச முறைமை நிர்மூலமாக்கியது. சகல துறைகளிலும்

கா. செல்வி

வேலை செய்வதற்கான உரிமையை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். புதிய சீனாவில் வழக்கிலிருந்த ஷஷவானத்தின் பாதியைத் தாங்குதல்'' (Holding up half the sky) எனுங் கூற்றானது சீனப் புரட்சியில் ஆண்களுடன் இணைந்து நின்ற மாபெரும் பெண்கள் சக்திக்கு எடுத்துக்காட்டாகின்றது. எவையெல்லாம் ஆண்களால் செய்ய முடியுமோ அவை யாவும் பெண்களாலும் முடியும் என்ற நிலை ஏற்பட்டது.

பாட்டாளிகளின் புரட்சியில் கிடைத்த ஒவ்வொரு படி முன்னேற்றமும் சீனாவின் பெண் விடுதலை இயக்கங்களுக்கு கிடைத்த முன்னேற்றம் என்பதனை சீன வரலாறு காட்டி நிற்கிறது. ஏற்கனவே நடைபெற்ற கலாச்சாரப் புரட்சியும் கன்பூசியசிற்கெதிரான இயக்கமும் பெண்விடுதலை இயக்கங்களை புதியதொரு கட்டத்துக்கு இட்டுச் சென்றது.

வேலை செய்யும் சீனப் பெண்களுக்கு பழைய சமூகமும் புதிய சோசலிச சமூகமும் இருவேறுபட்ட உலகங்களாக இருந்தன. சகல துறைகளிலும் அவர்கள் ஆண்களுக்கு சமனான உரிமைகளை அனுபவித்தனர். தனது பழைய வாழ்க்கையை நினைவு கூரும் சோசலிசப் பெண் ஒருவர் ஷஷஅப்போது எனக்கென்றொரு தகுதிநிலையோ, தனித்துவமான அடையாளமோ இருக்கவில்லை. எனது பெயரைக் கூட எந்தவொரு இடத்திலும் பயன்படுத்தவில்லை. நான் எனது கணவனது குடும்பத்துக்கு சொந்தமானவளாகவே கருதப்பட்டேன். ஆனால் இன்று 2000இற்கு மேற்பட்ட ஆண், பெண் பிரதிநிதிகளுடன் இணைந்து அரச விவகாரங்கள் பற்றிக் கலந்துரையாடுகிறேன்', என்று கூறினார்.

விடுதலையைத் தொடர்ந்து குறிப்பாக கலாச்சாரப் புரட்சி ஆரம்பித்த பின்னர் அரசாங்கமும் கம்யூனிசக் கட்சியும் பெண் தலைவர்களை உருவாக்குவதற்கும் பயிற்சியளிப்பதற்குமென விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டன.

சீன கம்யூனிசக் கட்சியிலும் கம்யூனிச இளைஞர் கழகத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட்ட பல்லாயிரக்கணக்கான பெண்கள் சீனாவின் சகல பாகத்திலுமுள்ள மக்களையும் கம்யூனிச பாதைக்கு கொண்டு வருவதற்காக கடுமையாக உழைத்ததுடன் அவர்களுடன் நெருக்கமான தொடர்புகளையும் கொண்டிருந்தனர். இவ்வாறு பல்லாயிரக்கணக்கான பெண்கள் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டமையால்தான் சீனாவில் அவர்கள் விடுதலை பெறுவது சாத்தியமாயிற்று. இதனையே 1939 இல் சீனத்தலைவர் மாஓவும் ஷஷசீனாவின் சனத்தொகையில் அரைப்பங்கை வகிக்கும் பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டாலே சீனப்போரில் வெற்றி பெறமுடியும்'' என்று கூறினார்.

1942 இல் யப்பானிய வல்லாதிக்க சக்தி ஷஷஎல்லோரையும் கொல்லுதல், எல்லாவற்றையும் சூறையாடுதல், எரித்தல்'' என்ற கொள்கையில் ஷதுடைத்தழித்தல்' என்ற நடவடிக்கையை ஆரம்பித்தபோது சீனப் பெண்கள் ஆண்களை ஒளித்து வைத்திருப்பதிலும் அவர்களுக்கு தகவல்களை வழங்குவதிலும் உதவியதுடன் அவர்களுடன் இணைந்து இரவு ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். எல்லா ஆண்களும் போராட்டத்துக்கு சென்றதாலும் மறைவு வாழ்க்கையில் ஈடுபட்டதாலும் பெண்களே நிலங்களை உழுது, பயிரிட்டு, அறுவடைசெய்து போராளிகளுக்கு தானியங்களை அனுப்பி வைத்தார்கள்.

யப்பனுக்கெதிரான போர் வெற்றிகரமாக முடிவடைய அமெரிக்காவின் ஆதரவுடன் ஷகோமின்ராங்' பிற்போக்குவாதிகள் நடாத்திய உள்நாட்டுப்போர் ஆரம்பமாகியது. இதில் ஏழைவிவசாயிகளின் நிலச்சீர் திருத்தங்களுக்கு தலைமைதாங்குதல், பிரபுத்துவ நிலக்கிழாந்தரின் ஆட்சியைக் கவிழ்த்தல், போராட்டத்துக்கு பலமான ஒரு அடித்தளத்தை கட்டியெழுப்புதல், போராட்டத்துக்கு ஆதரவளிப்பதுடன் தமது பிரதேசங்களிலிருந்து பிற்போக்கு வாதக் கருத்துக்களை விரட்டுதல் ஆகியனவே பெண்களின் பணிகளாகவிருந்தன.

1960 இல் மக்கள் விடுதலை இராணுவத்தில் (PLA) இணைந்து கொள்வதற்கு மாஓ விடுத்த அழைப்பை ஏற்று முதன்முதலில் இராணுவத்தில் இணைந்து கொண்டனர். அவர்கள் கடற்கரையிலும் வயல்வெளிகளிலும் தம்மை வருத்தி கடுமையான பயிற்சிகளைப் பெற்றனர். ஆரம்பத்தில் துப்பாக்கிகளை ஏந்தியவாறு பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளில் தனித்து ஈடுபடுவது அவர்களுக்கு வித்தியாசமானதொரு அனுபவத்தையே தந்தது. சேறினுள் கைகளையும் கால்களையும் பயன்படுத்தி அவர்கள் ஊர்வு நகர்வுகளை மேற்கொண்டு, வியர்வையில் குளித்து தம்மை இராணுவ வீரர்களாகப் புடம் போட்டுக் கொண்டபோது, பிரபுத்துவ கருத்துக்களில் ஊறியிருந்த மக்களின் கடும் விமர்சனங்களுக்கு ஆளானர்கள்.

ஷஷமுன்னர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றவர்களின் தயவில் வாழவேண்டியிருந்தது. மற்றவர்களுக்கு மத்தியில் இருக்கும் போது நிலத்தைப் பார்த்தவண்ணம், அவர்கள் எம்மைத்தாக்கினாலும் தடுப்பதற்குகூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Njrpa kfsph;khehL

தேசிய மகளிர் மாநாடு. தமிழீழப் பெண்களின் எழுச்சியின் அடையாளமும் உந்துசக்தியுமான 2ம் லெப் மாலதியின் நினைவு நாளை அண்மித்து, தற்போது கனிந்துள்ள புதிய சூழலில் அனைத்துப் பிரதேச தமிழீழப் பெண்களையும் ஒன்று கூட்டும் நோக்கோடு தமிழீழப் பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தால் ஒழுங்கமைக்கப்பட்டது இம் மாநாடு.

தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பல்வேறு பெண் அமைப்புக்களின் பிரதி நிதிகளாக 300ற்கும் அதிகமான பெண்கள் கலந்து கொண்டனர்.

இம் மாநாடு செப்ரெம்பர் 28, 29, 30 ஆகிய திகதிகளில் போரால் அழிந்து மீளுருவாகும் நகரான கிளிநொச்சியில் நடைபெற்றது. தமிழீழப்பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதும், அவை தொடர்பாகக் கலந்துரையாடி தீர்விற்கான வழிகளைக் கண்டடைவதுமே மாநாட்டின் நோக்கமாக இருந்தது.

சமூகத்தின் பல்வேறு நிலைகளையும் சேர்ந்த பெண்கள் ஒன்று கூடினார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்தினரும் தாம் இனங்கண்ட தம் மாவட்டப் பிரச்சினைகளை அறிக்கையாக்கி சமர்ப்பித்தனர். மாநாட்டில் கலந்து கொண்டோர் மூன்று அணி களாக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டப் பிரச்சினையும் ஒவ்வொரு குழு வினராலும் தனித்தனியாக ஆராயப்பட்டன.

ஆராயப்படும் பிரச்சினைக் கான தீர்வு ஆலோசனைகள் மூன்று குழுக்களாலும் தயாரிக்கப்பட்டு பொதுஅமர்வின்போது வாசிக்கப் பட்டன.

மாநாட்டை உற்சாகத் தோடும் செயல் வேகத்தோடும் வழிநடத்திச் செல்வதில் அரங்க செயற்பாட்டுக் குழுவினரும், போராளிகளும் இணைந்து பணியாற்றினர்.

காலை அமர்விற்கு முன்னதாக ஒவ்வொரு குழுவினரும் சிறுவிளையாட்டுக்களிலும், ஆடல் பாடல்களிலும் இணைந்து தம் இளமை நாட்களை மீள வாழ்ந்து மகிழ்ந்தனர்.

பிரதேச வேறுபாடோ, வயது வேறுபாடோ மறந்த, மனங்களை விசாலமாக்கிய பெண்களின் சங்கமமாக இது நடந்தேறியது. பாடினார்கள், ஆடினார்கள், விளையாடினார்கள், தம் பிரச்சினைகளின் வேர்களைக் கண்டறிய விவாதித்தார்கள். மனந்திறந்த உரையாடல்களாக, அறிவுபூர்வமாகத் தர்க்கிக்கும் ஆற்றலின் வெளிப்பாடாக எல் லோரையும் இணைத்துச் செல்கின்ற முயற்சியாக இவை அமைந்தன.

மாநாட்டு பங்கேற்பாளர்களுக்கான தங்குமிட, உணவு வசதிகள் போராளிகளால் நேர்த்தியாக ஒழுங்கமைக்கப் பட்டிருந்தன.

உறுதியும், வீரமும் ஆழவேரோடிய வன்னியின் மண்ணிலிருந்தபடி தமக்கான எதிர்கால செயற்பாடுகள் பற்றி, செயற்திட்டங்கள் பற்றி, அனைவரும் ஒன்றாகுதல் பற்றி எழுச்சி நிறைந்த தீர்மானங்களை எடுத்தனர். மாநாட்டின் பிரதான தீர்மானமாக "எங்களின் தாயகப் பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும், எமது சொந்த நிலங்களில் நாம் மீளக் குடியேற வேண்டும்'' எனும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இராணுவம் முற்றாக வெளியேறிய பாதுகாப்பான சூழலே பெண்கள் தொடர்பான எதிர்கால நலத்திட் டங்களை செயற்படுத்துவதற்கு வாய்ப்பானதாக அமைய முடியும். இதில் அனைவரும் கருத்தொரு மித்திருந்தனர்.

இறுதி நாளில் பங்கேற்பாளர்களாலும், அரங்க செயற்பாட்டுக் குழுவினராலும் நாடகங்களும், கலைநிகழ்வுகளும் நிகழ்த்தப்பட்டன. யாழ்.பல் கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. சிதம்பரநாதன் என்பவர் அனைவரையும் இணைத்த கலந்துரையாடல் மூலம் மாநாட்டில் பங்கேற்றோர் கருத்துரை வழங்கினார். இறுதி நாள் நிகழ்வில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். ஒவ்வொரு மாவட்டப் பெண் பிரதிநிதிகளும் தம் மாவட்டம் சார்பான பிரச்சினைகளை அவர்முன் வைத்தனர்.

மூன்று நாட்களும் புதிய செய்திகளையும், புதிய வலுவையும், புதியவழிகளையும் பங்கேற்ற வர்களுக்கு வழங்கின.

▲▲▲▲

''கந்தையா அண்ணை சொல்லுறார் ஓடட்டுமாம் '' வயதில் மிகச்சிறிய பெண்ணொருத்தி வழிகாட்டி கட்டளை வழங்க பெண்களின் அணியொன்று மிக உற்சாகமாக விளையாட்டில் ஈடுபட்டிருந்தது. வயதான அம்மாக்கள் முதல் மிக இளவயதுப் பெண்கள் வரை அந்த அணியிலிருந்தனர்.

'மகளிர் மாநாடு' என்றதும் எழுந்த தொடரான மேடைப்பேச்சுக்கள் பற்றிய அச்ச எதிர்பார்ப்பு உடைந்து அனைவருள்ளும் உற்சாகம் தொற்றிக்கொண்டது. ஈகச் சுடரேற்றி, தேசியக்கொடியேற்றி மாநாட்டை ஆரம்பித்து வைத்த மகளிரணித் தளபதிகளும், துறைசார்ந்த பெண் பொறுப்பாளர்களும் புன்னகையுடன் விளையாட்டை ரசித்துக் கொண் டிருந்தனர்.

தமிழீழத்தின் திசைகள் எல்லாவற்றிலிருந்தும் வந்திருந்த பெண்களின் சங்கமம் அது.

வயது வேறுபாடின்றி உற்சாகம் பொங்க, புன்னகை மின்னிய அந்த முகங்கள் ஒவ்வொன்றிலும் எங்கள் தேசத்தின் முகம் தெரிந்தது.

தம்முள்ளிருந்த கட்டுக்கள் அறுபட போரும், சமூக வாழ்வும் தம்மீது சுமத்திய சோகங்களின் கனம் மறந்து சிரிப்பில் ஒளிர்ந்த அவர் விழிகளில் மாநாட்டின் நோக்கமும், அதனூடாக வழிநடந்து இனி வரும் காலங்களில் அடையவென எண்ணப்படும் இலக்கும், எம் தேசத்தில் மலருமென நாம் எண்ணும் பெண்வாழ்வும் காட்சிகளாகத் தெரிந்தன.

சொந்த வாழ்வின் துயரங்களை மறந்து அந்த நிமிடங்களின் உற்சாகக் களிப்பில் கரைந்திருந்தனர்.

மாநாட்டு நாட்களில் ஆரம்ப நிகழ்வாக விளையாட்டு செயற் பாடுகளிலும், கலந்துரையாடல் களிலும் ஈடுபட்டனர். மிக்க ஆர்வத்துடனும், பொறுமையுடனும், அரங்கசெயற்பாட்டுக்குழுவினரும், யாழ். பல்கலைக் கழக மாண விகளும் இவர்களை வழிநடத்தி, இவர்களோடு வழிநடந்தனர்.

உற்சாகமும், எழுச்சியும் சேர்ந்திருந்த அந்தப் பொழுதில் ஒவ்வொருவரும் தங்கள் மனங்களை திறந்து கதைத்தனர்.

கண்ணீர் மல்க உணர்ச்சிவசப்பட்டுப் பேசிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்னை "வன்னியிலுள்ள இந்த வாழ்வு, போராளிகளுடன் இணைந்த அர்த்தம் கொண்ட இந்த வாழ்வுதான் எங்களுக்குத் தேவை. யுத்தத்தாலும், திட்டமிட்ட இராணுவ செயற் பாடுகளினாலும் எங்கள் பண்பாடு அங்கே சீரழிகிறது. எல்லா அழிவுகளிலிருந்தும் எங்களுக்கு மீட்சி தேவை. வன்னியிலிருக்கின்ற இந்த அச்சமற்ற உணர்வும், இயல்பும், உன்னதமும் கொண்ட வாழ்வு முறையும் அங்கே வரவேண்டும். வன்னியிலிருக்கின்ற உணர்வு யாழ் வரவேண்டும்'' என்றார்.

அந்தத் தாயின் கண்ணீரு டனான பேச்சு எல்லோருள்ளும் உணர்வுடனான சிந்தனையை எழுப்பியது.

மட்டக்களப்பிலிருந்து வந்திருந்த இளம்பெண், 'தான் மிகச்சிறிய வயதிலேயே இந்திய இராணுவ காலத்தில் இராணுவ கெடுபிடிக்காக வயதான தோற்றத்தைக் காட்ட புடவை கட்டியதையும், தன் சிறு வயதிலிருந்து இன்று வரையும் அவலத்துடனும், அச்சத்துடனும் கழிகின்ற மட்டக்களப்பு வாழ்வு பற்றியும் விழிகள் கலங்கக் கூறினார்.

இன்னுமொரு பெண் தமது அன்றைய வாழ்வு முறையிலிருந்த கட்டுப்பாடுகள், அச்சங்கள் பற்றிக் கூறி, தாம் இழந்துவிட்ட காலத்தினதும், வாழ்வினதும் பெருமதியை உணர்வதாகச் சொன்னார்.' மனந்திறந்த அவர்களின் உரையாடல்களினூடாக பொதுவான உணர்வின் தளம் நோக்கி அனைவரும் இணைந்தே பயணிப்பதாகத் தோன்றியது.

எல்லாரும் இனிதான வாழ்வுக்காக இனிவரும் காலங்களில் உழைப்போம் எனும் நம்பிக்கை ஒவ்வொரு மனங்களிலும் பிறந்தது.

அரங்கசெயற்பாட்டுக் குழுவினர் பாட அனைவரும் சேர்ந்திசைத்த "ஈழநாடே எழில் சூழும் நாடே'' எனும் பாடல் அவர்கள் மனங்களிலிருந்த நம்பிக்கை முழுவதுமாக உரத்த குரலில் வெளிவந்தது.

எங்கள் தாய்நாட்டின் சிறந்தவளம் நம்பிக்கை. அதனை நாம் என்றும் இழக்கோம், என்றும் இழக்கோம் என உரத்தொலித்து அந்தக் குரல்கள் பாடின.

▲▲▲▲

மாநாட்டு மண்டபம் எளிமையுடனும், நேர்த்தியுடனும் நிகழ்வொன்றிற்குரிய களையி லிருந்தது. செடிகொடிகள் இணைந்து அயற்சூழலுக்கு பசுமை தந்தன.

முதலாம் நாள் பொது அமர்வின் ஆரம்பநிகழ்வாக மாநாட்டில் பங்கேற்றோர் மிகச்சுருக்கமாகத் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர்.

தமிழீழத்தின் பல்வேறு மாவட்டப்பெண்களும், அவர்களின் அறிமுகப்பாணிகளும் ரசிப்போடும், விருப்போடும் கவனிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அறிமுகத்தை தொடர்ந்து தேசிய மகளிர் மாநாட்டின் நோக்கம் குறித்து தமிழீழ மகளிர் அரசியற்துறைப்பொறுப்பாளர் தமிழினி சிறப்புரையாற்றினார்.

மாநாடு பற்றிய முழுப் பார்வையையும், அது தொடர்பான எண்ணங்களையும், எமது பெண்களின் இன்றைய நிலை பற்றிய தெளிவையும், செயற்படும் மனத்துணிவையும் அந்த உரை யினூடாகப் பெற முடிந்தது.

''பெண்கள் வல்லமை மிக்கவர்கள். வல்லமை மிக்க இந்தப்பெண்கள் தமது வல்லமையின் மூலம் தமக்கும், தேசத்திற்கும், உலகிற்கும் பயனுள்ளதாக எதனை சாதிக்கப் போகிறார்கள் என்பது பற்றிய சிந்தனையையும், தேடலையும் நாங்கள் இந்த மாநாட்டினூடாக அவாவி நிற்கிறோம்.

பெண் ஒடுக்குமுறை என்றால் என்ன? பெண் விடுதலை என்றால் என்ன? பெண்களிற்குள் எப்படி மாற்றம் உருவாக வேண்டும் என்பன பற்றிய தெளிவின்மைகளை நீக்க முயற்சிக்க வேண்டும்.

இந்த ஒன்று கூடுதலின் மூலம், ஒருமைப்பாடலின் மூலம் எமக்குள் ஒரு ஒருமித்த கருத்தினை, ஒருமைப்பாடான தெளிவினை பகிர்ந்து கொள்ளப் போகிறோம். அந்தப் பகிர்வுதான் இந்த நிகழ்வு.

பெண்களுக்கான பிரச் சினைகளின் மூலம் எமது சமூகத்திலுள்ள பிற்போக்குத்தனமான கருத்துக்களிலுள்ளது.

பெண்ணின் வாழ்வு விதிக்கப்பட்ட வாழ்வாக, வாழ்வுமுறை எல்லையிடப்பட்டதாக உள்ளது.

எமக்கான இயல்பான வாழ்வை வாழும் உரிமை எமக்கு மறுக்கப்படுகிறது.

விதிக்கப்பட்ட வாழ்வையே உண்மை வாழ்வென எண்ணி வாழ்ந்து முடிந்து போன வரலாறுதான் எமது பெண்களுடையது.

பெண்ணுள்ளிருக்கும் மகத்தான ஆற்றல், சிந்தனை சரியாக வழிநடத்தப்படாது சிதைந்து பெண் பற்றிய சரியான வெளிப்பாடு சமூகத்திற்கு கிடைக் காமலே பெண் ஆற்றலற்றவளாக்கப் பட்டிருக்கிறாள்.

பெண்ணின் சிறுவயதில் விதைக் கப்படும் கருத்துக்கள், வளர்ப்பு முறைகள் அவளை பெண் எனும் விம்பத்தை விட்டு வெளிவராத பெண்ணாக உருவாக்குகின்றன.

இந்த உரு வாக்கம் பெண் தன் ஆற்றலை அறியாது தன்னுள் ஒடுங்கிக் போகக் காரணமாகிறது.

தனக்கிடப்பட்டிருக்கும் கட்டுக்களின் கனம் அறியாது பெண்ணின் வாழ்வு புனையப் பட்டுள்ளது.

சர்வதேச ரீதியிலும் பெண்களுக்கு பிரச்சி னைகளுள்ளன. பிரச்சினைகளின் வடிவங்கள் வேறுபடலாம். ஆனால் அடிப்படையில் பிரச்சினைகள் ஒன்றானவை.

எமது பெண்களின் பிரச்சினைகள் எமது சமூக பிற்போக்கு சிந்தனைகளினாலும் அரச - பயங்கரவாத செயல்களாலும் வேர்கொள்கின்றன. அதனோடு நாம் போராடவேண்டி இருக்கிறது. எமக்கான பிரச்சினைகளை விவாதிப்பதன் மூலம் எமது தேசம் முழுவதற்குமான மேம்பாட்டிற்கான திட்டம் வகுக்கப்பட வேண்டும். அதனூடாக மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

## பிரச்சினைகளின் ச
## தீர்வுக்கான மு



www.tamilarangam.net



பெண் என்பவள் ஒரு மனிதப் பிறவி. நாங்கள் பெண்களாக இயல்பான மனிதப் பிறவிகளாக இருக்க விரும்புகிறோம்.

விருப்பு, வெறுப்பு, ஆசை, சக்தி, வல்லமை, சிந்தனை கொண்ட மனிதர்தான் நாம்.

எம்மிடமுள்ள மனிதத்தை




மதிக்கும்படிதான் நாம் கேட்கிறோம். பெண்களின் கையிலேதான் ஒரு சமூகத்தின் இயங்கு சக்தி உள்ளது.

ஒரு தாய் நினைத்தால் தன் பிள்ளையை எப்படியும் உருவாக்கலாம். பெண்கள் நினைத்தால் ஒரு சமூகத்தை எப்படியும் உருமாற்றலாம். ஆளுமை கொண்ட தாயினால்தான் ஆற்றல் கொண்ட சந்ததியை உருவாக்க முடியும்.

தாய்மை அற்புதமானது. தாய்மை என்பது ஒரு சமூகத்தின் தலைமைத்துவம் பெண்ணிடமுள்ளது என்பதற்கான அடையாளமாகிறது.

கருவிலுள்ள குழந்தை தாயின் எண்ணங்களையும், கருத்துக்களையுமே பிரதிபலிக்கப் போகிறது. எமது தேசியத் தலைவர் இவ்வாறு சொல்கிறார் "உலகம் தாய்மையின் காலடியில் உருள்வதால்தான் நான் பெண்மையைப் போற்றுகிறேன்."

பெண் ஒரு வல்லமை மிக்க சக்தி என்பதை முதலில் பெண்களே புரிந்து கொள்ள வேண்டும்.

பொருளாதாரநிலையில் தங்கி வாழாத, தனது சுயத்தை வளர்த்த பெண்ணாக பெண் உருவாக வேண்டும்.

நான் யார்? என்னுடைய இயல்புகள் என்ன? எனது பலம் என்ன? பலவீனம் என்ன? இவ்விதம் எங்களை நாங்கள் இனங்காண வேண்டும்.

தமிழீழப்பெண்களாகிய நாங்கள் வித்தியாசமானவர்கள்.

எம்மை நாம் அறிய, எமது பலத்தை அறிய வழிகாட்டியது விடுதலைப் போராட்டமே.

எமது மனச்சிறைகள் உடைபட்டு, எமது மன உலகில் மாற்றம் ஏற்பட வேண்டும். பெண் தன்னைத்தானே செதுக்கிக் கொள்ள வேண்டும். சமூகத்தால் வார்க்கப்படாது தன்னைத்தானே பெண் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பெண் விடுதலை பற்றி எமது தலைவர் இவ்விதம் மிக ஆழமாகவும், அழகாகவும் கூறுகிறார்.

"ஆண்-பெண் பாலியல் வேறுபாடுகளுக்கப்பால் மனிதம் இருக்கிறது. அந்த மனிதத்திற்கென இயல்பான ஆளுமை இருக்கிறது. அந்த ஆளுமை மதிக்கப்படும் போது பெண் விடுதலை சாத்தியமாகிறது".

▲▲▲▲

மாநாட்டின் பிரதான செயற்பாடாக ஒவ்வொரு மாவட்ட மகளிர் பிரதிநிதிகளாலும் அந்த மாவட்டப் பெண்களின் பிரச்சினைகள் அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டன.

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மாநாட்டின் மூன்று நாள் அமர்வுகளிலும் மகளிர் அணிகளிடையே வாசிக்கப்பட்டு பிரச்சினைகள் தொடர்பான விவாதங்களும், கருத்து வழங்கலும் இடம் பெற்றன. மூன்று அணிகளாக்கப்பட்டிருந்த மாநாட்டு பங்கேற்பாளர்களிடையே ஒரே நேரத்தில் ஒரு மாவட்டம் தொடர்பான பெண்கள் சமர்ப்பிக்கப்பட்டு வாசிக்கப்பட்டன. மாநாட்டு மண்டபம் அமைந்திருந்த சூழலில் வெண்மணல் பரவியிருக்கும் பெருமரங்களின் கீழ் அணிகள் தனித்தனியாக அமரும். அரங்க செயற்பாட்டுக்குழுவினரும், பல்கலைக்கழக மாணவிகளும் உரையாடலை நெறிப்படுத்த சமர்ப்பிக்கப்பட்ட மாவட்டப் பிரச்சினை தொடர்பாக மனந்திறந்த விவாதங்கள் இடம்பெறும். ஒரு அணி எனும் போது அதில் தமிழீழத்தின் எல்லா மாவட்டப் பெண்களும் இணைந்திருப்பர். ஒவ்வொரு மாவட்டப் பிரச்சினையும் அனைவரதும் ஆய்வுக்கு வரும். எல்லாப் பிரச்சினைகளும் எல்லாருக்குமானதாக, எல்லாத் துயரங்களுடனும் அனைவரும் சேர்ந்திருந்த உணர்வு எழ கருத்துக்களை தெளிவுடனும்,

**- ரஜனி. பே -**

உணர்வுடனும் முன்வைத்து உரையாடினர்.

முதல்நாள் நிகழ்வின்போது மன்னார் மாவட்டப் பெண்கள் பிரதிநிதிகளால் அந்த மாவட்டப் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய அறிக்கை வாசிக்கப்பட்டது.

பெண்கள் மத்தியில் சமூகவிழிப்புணர்வின்மை, சீதனக் கொடுமை, கல்வி அறிவின்மை, கருத்தியல் ரீதியான தெளிவும், மாற்றமும் இன்மை என்பன இனங்காணப்பட்ட முக்கிய பிரச்சினைகளாக இருந்தன. பெண்களை சிந்தனை ரீதியாக வளர்ப்பதன் மூலமும், அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதன் மூலமும், தீர்மானங்களை எடுப்போர் பெண்களாக அமைந்த செயற்பாட்டுத் திறன் கொண்ட பெண் குழுக்களை அமைப்பதன் மூலமும் இப்பிரச்சினைகளுக்கான தீர்வினை அணுக முடியும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

திருகோணமலை மாவட்டப் பெண்களால் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் இராணுவ ஆக்கிரமிப்பால் எழுந்துள்ள பிரச்சினைகள், சீதனப் பிரச்சினை, உழைப்பிற்கேற்ப ஊதியமின்மை, பெண்கள் பொது இடங்களில் இம்சிக்கப்படுதல், தமிழ்ச்சிறுமிகள் சிங்கள வீடுகளில் வேலைக்கமர்த்தப் படுவதும் அதனால் அவர்களின் வாழ்க்கைப்பாணி மாற்றமடைவதும், பருவமடைந்த பின் பெண்பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமை, வெளிநாடுகளிற்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளும், அவர்களின் குடும்பங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளும் இனங் காட்டப்பட்டன. பாதிப்புற்ற, பிரச்சினைக்குள்ளான பெண்களை இனங்கண்டு புதிய கருத்தூட்டல்களையும், வாய்ப்புக்களையும் வழங்கி மேம்பாடடைய செய்வதுடன் அறிவான சமூக வளர்ச்சிக்கு அத்திவாரமிடவேண்டும். அறிவும், ஆரோக்கியமும் கொண்ட சமூகமே தன்னுள்ளிருக்கும் குறைபாடுகளை நீக்கும்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டப் பெண்களின் அறிக்கையிலே இராணுவ ஆக்கிரமிப்பும் அதனோடு இணைந்ததாக காலங்காலமாக அப்பிரதேசப் பெண்கள் அனுபவிக்கும் துயரங்களும், தொடர்ந்த இராணுவ ஆக்கிரமிப்பால் ஏற்பட்டுள்ள சமூகச் சீர்கேடுகளும் அதனோடிணைந்த தான பெண்கள் பிரச்சினைகளும், இளவயதுத் திருமணங்கள், கல்வி கற்கும் வாய்ப்பற்ற நிலை கசிப்புப் பாவனையும் சமூகச் சீர்கேடுகளும் கூறப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட பெண்களின் அறிக்கையிலே யாழ் சமூகம் அதிகாரப்படிநிலை கொண்ட ஆணாதிக்க சமூகம்; குடும்ப எல்லைக்குட்பட்டதாகவே பெண் காணப்படுகிறாள். மிக மோசமான சீதனப்பிரச்சினை, சாதி, சமய சிக்கல்கள், கல்வித் தெரிவில் "பெண்களுக்கான கல்வி" எனும் எல்லை, தனியார் தொழிலிடங்களில் சம்பள வேறுபாடு, அதிக நேர வேலை. போரினால் ஏற்பட்ட பெண்களுக்கான பிரச்சினைகள். கசிப்பு மற்றும் சமூகச் சீர்கேட்டு தாக்கங்கள். தீர்மானம் எடுப்பதில் குடும்பங்களில் பெண்களின் பங்கு என்பன பற்றி விரிவாகக் கூறப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டப் பெண்கள் அறிக்கையில் தமது பிரச்சினைகளை பின்வரும் எண்ண வெளிப்பாட்டுடன் முன்வைத்தனர். எங்களுக்கு புரிந்துகொள்ளும் மனம் வேண்டும். ஒப்புக்கொள்ளும் மனமோ, ஒப்புக்கொள்ளாத மனமோ, விவாதத்தில் அந்தப் பக்கமோ, இந்தப் பக்கமோ சேர்ந்து கொள்ளும் மனமோ, வெறும் வார்த்தைகளில் விவாதிக்கும் மனமோ கூடாது. புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமுள்ள மனம்தான் வேண்டும். இவர்கள் இனங்கண்ட பிரச்சினைகளாக போர், தொழில், சீதனம், கல்வி, மருத்துவ வசதி என்பவற்றினூடாகக் கூறுகின்றனர்.

வவுனியா மாவட்டப் பெண்களின் அறிக்கையில் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரச்சினை, அகதி முகாம்களில் ஏற்படும் பண்பாட்டுச் சீரழிவு, கசிப்புப் பாவனை, விடுதிகளில் ஏற்படும் பிரச்சினைகள், பெண்களுக்கான ஊதியக் குறைவு, மாற்றுக் குழுக்களினால் உண்டாகும் சிக்கல்கள் என்பன கூறப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அறிக்கையில் போரும், போருள்ளான வாழ்வும், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும், சீதனக்கொடுமை, பொருளாதார சிக்கல், வேலை வாய்ப்பின்மை என்பன பற்றிக் கூறப்பட்டது.

ஒவ்வொரு மாவட்ட அறிக்கையிலும் மேற்சுட்டப்பட்ட பிரச்சினைகள் தெளிவாகவும், விரிவாகவும் விளக்கப்பட்டிருந்தன.

▲▲▲▲

மகளிர் தேசிய மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளினதும், தொடர்பான கலந்துரையாடல்களினதும் பெறுபேறாக, தீர்வு நோக்கிய வழிகாட்டலாக மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி மாநாட்டின் தீர்மானங்கள் பற்றி விளக்கவுரை நிகழ்த்தினார்.

முதலாவதும், பிரதானமானதுமான தீர்மானமாக,

''எங்களின் தாயகப்பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும், எமது சொந்த நிலங்களில் நாங்கள் மீளக் குடியமர வேண்டும்'' எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சொந்த இடத்திலான பாதுகாப்பான வாழ்வுதான் பெண்களின் அநேக பிரச்சினைகளுக்கான நல்ல தீர்வை நோக்கி அவர்களை வழிநடத்தும்.

எமது பிரச்சினைகள் ஒரு நொடியில் தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளல்ல மிக ஆழமானதும் காலங்கள் கடந்ததுமான பிரச்சினைகள் இவை. இவற்றுக்கான தீர்வு நோக்கிய அடிவைப்பின் ஆரம்ப கட்டமே இந்த மாநாடு.

பொது நிலையில் எங்கள் எல்லோரினதும் பிரச்சினைகளும் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு எமக்கான ஆரம்பம், அறிமுகம்.

இன்னும் எங்களால் இனங்காணப்படாது எம்முள்ளே ஆயிரமாயிரம் பிரச்சினைகளுள்ளன. அவை இனங்



காணப்படுவதும் ஆராயப்படுவதும் முக்கியம்.

சட்டரீதியான பாதுகாப்பு இன்னும் பெண்களுக்கு விரிவுபடுத்தப்பட வேண்டும். எதிர்கால பொருளாதார வேலைத் திட்டங்களில் முக்கிய பங்காளிகளாகப் பெண்கள் மாறவேண்டும். பெண்கள் அனைவரும் உழைப்பாளர்களாக வேண்டும். பால்வேறுபாடற்று அனைத்துத் தொழிநுட்பப் பயிற்சிகளையும் பெண்கள் பெறும் வாய்ப்புக்கள் தேவை. இதற்கான விழிப்புணர்வும், முன்வருதலும் பெண்களிடையே உருவாக வேண்டும்.

இந்தப்பணி பெண்கள் அமைப்புக்களினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். பெண்களுக்கென தொழிற்பட்டறைகளும், பயிற்சிக் கூடங்களும் உருவாக்கப்பட வேண்டும்.

வீட்டிலிருக்கின்ற பெண்களுக்கான சிறுகைத்தொழில் முயற்சிகள் தேவை. அதற்கான விழிப்புணர்வு, பயிற்சி, ஊக்குவிப்பு, உதவித்திட்டம் இவைகளை வழங்க அவர்களை இனங்கண்டு அணிதிரட்டுதல் அவசியம்.

சேமிப்புப் பழக்க ஊக்குவிப்பு அனைத்துப் பிரிவினரிடையேயும் தேவை.

பெண்பணியாளர்களுக்கான நலன் காப்பகங்கள் அமைக்கப் படுதல், நலன் காப்பகங்கள் மூலமாக பெண் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

குழந்தைகள் தொழிலில் அமர்த்தப்படுவதை தடை செய்தல். அனைத்துக் குழந்தைகளையும் பாடசாலைக்கு அனுப்புதல்.

கல்விக்கொள்கை வகுப்பதில் மாற்றமும் புதிய கருத்துக்களும் தேவை. பால் வேறுபாட்டை உணர்த்தும் கல்வித் திட்டங்களை இல்லாது செய்தல்.

மாணவர்களை புதிய சிந்தனையாளர்களாக உருவாக்கக் கூடிய பிற்போக்குத்தனங்களற்ற புரட்சிகர மனப்பாங்கு கொண்ட ஆசிரிய சமூகம் உருவாகவேண்டும்.

பெண்களின் கல்விச்சட்டம், அரசியல், இலத்திரனியல், பொறியியல் என அனைத்து தளங்கள் நோக்கியும் விரிவடைய வேண்டும். இதற்கென ஊக்குவிப்புகள் தேவை.

பெண்கள் மனத்துணிவுடனும், வல்லமையுடனும் உருவாக அவர்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் அவசியம்.

பெண்கள் தொடர்பாக முறையான சமூக ஆய்வுகள் இடம்பெற வேண்டும். ஆய்வின் மூலமாக பெறப்பட்ட தகவல்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

இனங்காணப்படும் பிரச்சினைகள் உரிய அமைப்பின் மூலம் தீர்விற்கான நடைமுறைக்கு உள்ளாக வேண்டும்.

பெண்களின் பிரச்சினைகளை ஆராயவும், விவாதிக்கவும், தீர்வுகாணவும் வழியமைக்கக் கூடிய பெண்களுக்கான பத்திரிகை வளர்ச்சி காணவேண்டும்''

எனத் தன் கருத்துரையில் தமிழினி அவர்கள் குறிப்பிட்டார்.

பல பிரதேசப் பெண்களையும் ஒன்றிணைத்து, அனைவரதும் பிரச்சினைகளை பொதுநிலைப்படுத்தி உணர்வாலும், செயலாலும் அவர்களை ஒன்றிணைத்து தீர்வின் திசைகள் பற்றிய உரத்த சிந்தனைகளை இம் மாநாடு கலந்து கொண்டோரிடையே உண்டாக்கியது.

◆

www.tamilarangam.net






அவளுக்கு அழுகைதான் வந்தது. அதற்கான காரணம் சொன்னால் அனைவரும் சிரிப்பார்கள்.

ஆம். அவள் நீண்ட காலத்தின் பின் விடுமுறையில் வந்திருந்தாள். சண்டைக் காலங்களில் அவள் எங்கே நின்றாள் என்றே தெரியாது. தமது மகள் இறந்திருக்கலாம் . இவர்கள் அதனை மறைக்கின்றார்கள் என்று குடும்பத்தவர்கள் ஒரு முறை தீர்மானமெடுத்து அவளுக்கு உரிய தொடர்பக முகாமிற்குள் சென்று ஒரு ஆர்ப்பாட்டமே நடத்தியிருந்தார்கள். அதனை அவளது தோழிகள் அவளுக்குச் சொல்லிச் சிரித்திருக்கின்றார்கள். இப்பொழுது யுத்த நிறுத்தம் என்பதால் சற்று ஓய்வாக இருப்பதனால் அனைவரையும் போல அவளும் விடுமுறையில் வந்திருக்கின்றாள். அவ்வாறு விடுமுறையில் வந்திருக்கும் தங்களது பிள்ளையின் மீதான பாசத்தை அவளது குடும்பத்தினரும் உறவினர்களும் உணவின் மூலம் காட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களது பாசம் முழுவதையும் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அவளது உணவுப்பையில் இடம் இருக்கவில்லை. வேண்டாம் என்று சொன்னாலும் அவர்கள் விடுவதாயில்லை. அதுதான் அவளது அழுகைக்கான காரணம்.

இந்த நேரம்தான் நல்ல உவட்டுக்குள் கட்டி நிற்கும் படகில் ஆசை வந்தது. இப்போது எப்படியாவது சிரமப்பட்டு அதிலே ஏறினால்ப்போதும். இந்த வயிற்றுக்கோளாறு இலகுவாய்த் தீர்ந்து போகும்.

இயலாக் கட்டத்தில் அவள் தங்களுக்கேயுரிய பாசையில் அம்மாவைப் பார்த்து முறைத்தபடி கேட்டாள்,

"எனக்கென்ன இரப்பையா, உரப்பையா? "

அம்மா ஒருகணம் நிலைகுலைந்தாள்.

"உனக்கெண்டு செய்யிறது பிள்ளை"

அம்மாவின் கையில் இருந்த உணவைப் பார்த்து விட்டுத் தூரத்தே வெறித்த அவளது கண்களில் ஆபிரிக்க நாடுகளில் எலும்பும் தோலுமாய் ஏக்கப்பார்வையுடன் உணவுக்காய்த் தவமிருக்கும் சிறுவர்களல்ல, எங்களது தேசத்திலேயே பசியுடன் பாடசாலைக்கு வந்து மயங்கி விழும் குழந்தைகள் வந்து நின்றார்கள்.

"எப்போது இந்த உணவு நிலை சமப்படும்? "

என்று சலிப்புடன் நினைத்துக் கொண்டவள்,

"தமிழீழத்தில்தானே எதுவுமே சீராயமைய முடியும்"

என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

எப்போதாவது உணவு சமிபாடு அடையாத பிரச்சினை வந்தால் மிதமிஞ்சிய சூட்டில் தேநீர் குடிப்பாள், அல்லது மருத்துவப் போராளிக்குத் தெரியாமல் இரண்டு 'டையின்எடுத்துச் சாப்பிடுவாள். இப்போது இரண்டு அல்ல, பாதி 'டையின்' கூடச் சாப்பிடுவதற்கு இடமில்லை.

உணவுத் தட்டை உள்ளே வைத்து விட்டு அம்மா அவளருகில் வந்து அமர்ந்தாள். வேறெவரும் வீட்டில் இல்லை. ஆறுதலாக ஏதும் கதைக்க அம்மா நினைத்திருக்கக்கூடும். அவள் அம்மாவின் மடியில் சாய்ந்தாள். தாயின் மடிதான் உடல் நோய்க்கும், உள நோய்க்கும் உலகிலேயே தலைசிறந்த மருந்து என்று அப்போது தோன்றியது. அம்மா மெதுவாக அவளைத் தடவிக் கொடுத்தாள். அப்போதுதான் அவளது கண்களில் அது பட்டிருக்க வேண்டும்.

"இது என்ன பிள்ளை காயம்?"

அது தீப்பற்றி எரிந்த தோழியைக் காப்பாற்றப் போய் ஏற்பட்ட காயம் என்று சொன்னால் விடுமுறை முடிந்து போக விடமாட்டார்கள். ஆகவே அவள் அம்மாவைச் சிரித்துச் சமாளித்தாள்.

அம்மா தீவிரமாயும் அப்பாவித்தனமாயும் கேட்டாள்.

"நீ ஏன் பிள்ளை இயக்கத்துக்கு போனனி ?"

அவள் நிதானமாய்ச் சொன்னாள்.

"நீங்கள் விட்ட பிழையாலதானம்மா"

அம்மா புரியாமல் நெற்றி சுருக்கினாள்.

"நீங்களோ அப்பாவோ கூட எங்களை அடிச்சு வளக்கேல்லே. அப்பிடி வளர்ந்த என்னை ஆரோ ஊரும் பேரும் தெரியாத ஒருத்தன் வந்து அதிகாரம் செய்யிறதை நான் விரும்பேல்லை. என்னை நானே தீர்மானிச்சுக் கொள்ளுற வாழ்க்கையைத்தான் விரும்பினன். அதாலதான் போனனான்."

அம்மா பெருமூச்சு



விட்டாள்.

"இனியென்ன சண்டை முடிஞ்சுதுதானே பிள்ளை விட்டிட்டு வாவன்?"

"வந்து என்ன செய்யிறது?"

"அண்ணாவுக்கு அடுத்த வருசம் 'சிற்றிசன் கிடைக்குமாம். அவன் உன்னை எடுக்கிறானாம். இல்லாட்டா சித்தப்பா எடுப்பார்தானே பிள்ளை. மாமாவும் தான் எடுப்பன் எண்டு கதைச்சவர்."

அவளது சிந்தனை வேறு திசையில் ஓடிற்று. சித்தாவிற்கு ஐந்து பிள்ளைகள். அவர் மூன்று பிள்ளைகளை போராட அனுப்பலாம். மாமாவிற்கு நான்கு பிள்ளைகள் அவரும் இருவரைத் தரலாம். இனி எதற்கு? தனியே சுதந்திரம் கிடைத்தால் போதுமா? நாட்டை யார் அபிவிருத்தி செய்வது? ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு, கிராமம் தோறும் பாடசாலை, வைத்தியசாலை என்று கட்டுமானப் பணிகளை யார் செய்வது? நிர்வாகத்தை யார் கவனிப்பது? என்று கேட்பார்கள்.

"நீ ஒண்டும் பேசாமல் இரு பிள்ளை. நான் படுறபாடு உனக்கென்ன தெரியும்? பிள்ளை வளக்கத் தெரியேல்லை எண்டு எல்லாரும் என்னைத்தான் பேசுகினம்"

ஓ! பெற்றோர்களால் சரியாக வளர்க்கப்படாத பிள்ளைகள்தான் போராடப் போகின்றார்களா? அவர்களால்தான் இவ்வளவு சாதனைகளையும் படைத்து புதியதோர் சரித்திரத்தை எழுத முடிகின்றதா? அப்படியானால் பெற்றோர்களே தயவு செய்து எந்தப் பிள்ளையையும் சரியாக வளர்க்காதீர்கள்.

அவளது மனம் கெஞ்சியது. அம்மாவினது விழிகள் ஊற்றெடுத்துப் பெருகின. அவளுக்கு ஏனோ சின்ன வயதில் படித்த நல்ல மேய்ப்பன் கதை ஞாபகத்தில் வந்தது. அந்த மேய்ப்பனிடம் நூறு ஆடுகள் இருந்தனவாம். அவற்றில் ஒன்று வழி தவறிப் போய் விட்டதாம். அவன் எஞ்சியிருந்த தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டு விட்டு அந்த ஒன்றைத்தேடிக் காடு மேடெல்லாம் அலைந்து கண்டு பிடித்தானாம்.

அம்மாவும் கூட அப்படித்தான் இருக்க விரும்புகிறாளா? தன்னுடன் இருக்கும் இரண்டு பிள்ளைகளை விடவும் என்னை ஏன் அம்மாவின் மனம் அதிகமாய் நாடுகின்றது?

ஓ! என் இனிய அன்னையே, நான் திசை தெரியாமல் வழி தவறிய ஆட்டுக்குட்டி இல்லை. எனக்குரிய சரியான வழியில் போய்க் கொண்டிருக்கின்ற ஆறறிவுள்ள உங்கள் பிள்ளை.

அவள் புன்னகையுடன் தாயின் கன்னங்களில் வழிந்த கண்ணீரைச் சுண்டிவிட்டாள்.

அவளைப் பார்க்க உறவினர்கள் வந்தார்கள். நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு அவர்கள் புறப்பட்ட பொழுது அவர்களது உந்துருளி செயற்பட மறுத்தது. அவளும், அம்மாவும் மட்டும்தான் வீட்டிலிருந்தார்கள். ஆகவே அவளே அதற்கு எண்ணை அடைக்கிறது என்று கண்டு பிடித்து 'பில்ரரைக்' கழற்றித் துப்பரவு செய்து கொடுத்தாள். அவர்கள் பெரிதாக வியந்தார்கள்.

அவர்களது வியப்பை மெல்லிய முறுவலுடன் ரசித்த படியே மனசுக்குள் கேட்டாள்,

"எங்களது பிள்ளைகள் நடுக்கடலில் வைத்தே 'கியர் பொக்ஸ்' மாற்றுவார்கள் தெரியுமா உங்களுக்கு?"

அம்மாவிற்கு ஏதாவது உதவி செய்ய அவள் முயன்ற போதெல்லாம் அம்மா தடுத்து விட்டாள். அவள் காரணம் கேட்ட போது,

"உந்த உடம்பு என்னத்துக்காகும்? சும்மாயிரு" என்றாள் அம்மா. அவள் வாய்விட்டுக் கண்ணீர் வரும் வரையும் சிரித்த படியே பார்வையால் சொன்னாள்,

"ஒவ்வொரு நாளும் முதுகு கொடுத்துப் படகு தள்ளுற உடம்பம்மா இது"

இரவில் வீட்டிற்குள் வேர்த்துக் கொட்டியது. அவள் முற்றத்து மாமரத்தின் கீழிருந்த காட்டுத் தடிக் கட்டிலில் சுவாத்தியமாகத் தூங்க விரும்பினாள். அப்பா கூடப் பூச்சி, புழுவிற்கு பயத்தில் வெளியே தூங்குவதில்லையாம் என்று அம்மா மறுத்து விட்டாள். எல்லோரும் தூங்கிய பின் அவள் சத்தம் போடாமல் வெளியில் வந்து நிம்மதியாகத் தூங்கினாள்.

சமையலறையே உலகம் என்று பழகியிருந்த அம்மாவை ஒரு மாற்றத்திற்காக வெளியே அழைத்துப் போனாள். இரணைமடு அணைக்கட்டால் பயணித்த போது அம்மா இறுக்கிப் பிடித்த பிடியில் அன்று முழுவதும் தோள் வலித்த படியேயிருந்தது. அதனை விடவும் 'அம்மா உனக்கு இவ்வளவு பயமா? என்று நினைத்து மனசு வலித்தது.

துயிலுமில்லம் கூட்டிப்போய் தனது தோழர்கள், தோழிகள் ஒவ்வொருவரையும் காட்டி அவர்கள் எப்படியெல்லாம் எரிந்தும், சிதைந்தும், கரைந்தும் இந்த நாட்டிற்காய்ச் செத்தார்கள் என்று சொன்னபோது அம்மா வழி நெடுகவும் அழுது கொண்டே வர எல்லோரும் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள்.

அவளைப் போலவே விடுமுறையில்

## - சூரியநிலா -

நின்ற அவளது தோழி ஒருத்தி பொழுது போகவில்லையாம் என்று அவளிடம் வந்தாள். இருவரும் சேர்ந்து வீட்டையே தலைகீழாக்கி விட்டு மரத்தில் ஏறி அமர்ந்து மாங்காய் சாப்பிட்டபடி கடற்கரை இப்போது எந்தச் சீரில் இருக்கும் என்று பேசிக்கொண்டார்கள்.

"புளி மாங்காய் பிள்ளை. காய்ச்சல் வரும்" மரத்தால் அவர்களை இறக்குவதற்காக அம்மா பொய் சொன்னாள்.

அவளது தோழி சிரித்தபடியே சொன்னாள், 'தனது அம்மாவும் தன்னை நீண்ட நேரம் தண்ணீருக்குள் நிற்க வேண்டாம், காய்ச்சல் வரும் என்று பேசினாவாம்.' இருவரும் சிரித்த சிரிப்பில் புரைக்கேறி தண்ணீர் குடிக்க இறங்கினார்கள்.

"துவக்கு உன்னைத் தூக்கும் போல கிடக்கு" அவளது தோழியைப் பார்த்து பெரியப்பா கேலியாகச் சொன்னார்.

இதே இந்தச் சின்னப் பெண்தான் படகில் மண்மூட்டை வைத்து ஏறி நின்று கனரக ஆயுதத்தை இயக்கி எதிரிக் கலங்களை வெளுத்து வாங்குகிறாள் என்பது தெரிய வந்தால் பெரியப்பாவின் முகம் எப்படிப் பேயறைந்தது போலாகும் என்று நினைத்து அவள் அடக்க முடியாமல் சிரித்தாள். அது புரியாமல் தோழி அவளை முறைத்தாள்.

அவள் விடுமுறை முடிந்து புறப்படுவதற்கு முதல் நாளிரவு ஆறாம் பிறை நிலவு கீழிறங்கிக் கொண்டிருக்க கண்சிமிட்டும் நட்சத்திரங்களிடம் கதை கேட்டபடி சந்தோஷமாய்ப் படுத்திருந்த அவளருகில் என்றுமில்லாதவாறு அம்மா வந்து படுத்தாள்.

முதன் முதலாய் ஓய்வாய்ப் படுத்தபடியே வானத்து வைரங்களைத் தரிசித்த அம்மா வியந்து போனாள்.

"எவ்வளவு வடிவாயிருக்கு"

"வடிவு மட்டுமில்லையம்மா, செயற்கை வழிகாட்டும்கருவிகள் செயலிழக்கையில் எமது நிலையான வழிகாட்டிகளாக இருப்பவை இவைதான்" என்று அவள் சொன்னது நிச்சயம் அம்மாவிற்குக் கேட்டிருக்காது.

மாமரத்தின் சலசலப்பின் தாலாட்டில் அவள் விரைவாகத் தூங்கிப் போய்விட்டாள். அம்மாவிற்கு அது புது அனுபவம். அவள் பிறந்து வளர்ந்தது நாற்சார வீட்டில். இடம்பெயர்ந்து அவலப்பட்டபோதும் இப்படி வானத்தைப் பார்த்து ரசிக்கும் அனுபவமோ, மனநிலையோ இருந்ததில்லை. அம்மா முதன் முதலாக உணர்ந்து கொண்டாள்.

'வாழ்க்கையும், இயற்கையும் மிகவும் அழகானவை. அவற்றில் அனுபவிக்க வேண்டிய பலவற்றை எங்களது தலைமுறை இழந்து விட்டது'

→

www.tamilarangam.net



மெதுவாய்த் திரும்பி மகளைப் பார்த்தாள். கடல் நீரில் ஊறி, கடற்காற்றில் காய்ந்து, வெயிலால் பதனிடப்பட்டு வலிமை பெற்ற உடலுடனும், தலைவரின் வளர்ப்பில் வைரம் பெற்ற மனத்துடனும் அவள் ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அம்மாவிற்கு அழுகை வந்தது. காரணம் புரியாமல் சத்தமின்றி அம்மா நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தாள்.

விடுமுறை முடிந்து அவள் புறப்படத் தயாரானாள். உறவினர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள்.

"போகத்தான் போறியோ பிள்ளை?'

"விட்டிட்டு வா பிள்ளை"

"போய் விலத்தப் போறன் எண்டு சொல்லு"

"நாங்கள் அங்கால போகேக்கை கூட்டிக் கொண்டு போறம். நீ வா"

என்று அவளை விக்கிரகமாய் நினைத்து அனைவரும் அர்ச்சனை செய்து கொண்டிருந்தார்கள்.

அவள் பிரயாணப் பையைக் கையில் எடுக்கவும் அதுவரையும் பேசாமல் இருந்த பெரியப்பா இப்போது வாய் திறந்தார்.

"நீ போக வேண்டாம் நில், நான் மிச்சம் பார்த்துக் கொள்ளுறன்"

அவள் இப்படியொன்றை எதிர்பார்க்கவில்லை. அவர்களது உறவினர்கள் அனைவரின் மத்தியிலும் பெரியப்பாவின் சொல்லுக்கு மறு பேச்சுக் கிடையாது. அவர் மீது அனைவரும் அதிக பாசம் வைத்திருந்தார்கள். அவரும் அப்படித்தான். யாருக்காகவும் உயிரைக் கூட கொடுக்கத் தயங்கமாட்டார்.

அவள் தவித்துப் போய் பெரியப்பாவைப் பார்த்தாள். படகில் ஏனைய அனைவரும் காயமும் வீரச்சாவும் அடைந்துவிட ஒரே ஒரு இயந்திரத்துடன் எதிரிப் படகுகளுக்குள்ளால் தனியே படகைக் கொண்டு வந்தபோது கூட அவள் இப்படிக் கலங்கவில்லை.

தனது பேச்சிற்கு மறுபேச்சு இல்லை என்பதால் பெரியப்பா மேலே எதுவும் பேசவில்லை. எல்லோரும் அவளது பதிலுக்காய்க் காத்திருக்க ஒரு கடுமையான அமைதி அங்கே நிலவியது. தனக்காகத் தானேதான் கதைக்க வேண்டிய கட்டாய நிலையில் அவள் வாய் திறந்த போது...

"அவள் போகட்டும் விடுங்கோ"

அவளால் தனது காதுகளையே நம்ப முடியவில்லை. பிரயாணப்பைகளை எறிந்து விட்டு ஓடி வந்து அந்தக் குரலிற்குரியவளைக் கட்டிக் கொண்டாள்.

தான் இழந்துவிட்ட சுதந்திரங்களையும் சந்தோஷங்களையும் தனது குஞ்சாவது அனுபவிக்கட்டும் என்று தாய்க் குருவி நினைத்தது போலும்.

அந்த இறுக்கமான அணைப்பில் மகள் தாய்க்கு நன்றி சொன்னாள். தாய் மகளுக்குத் தன் மனப்பூர்வமான ஆசியைத்தெரிவித்தாள். இருவரும் சந்தோஷக் கண்ணீருடன் பிரிந்தார்கள்.

முகம் கொள்ளாத மகிழ்வுடன் அவள் முகாம் திரும்பினாள். அவளைக் கண்டு ஓடிவந்து ஆர்ப்பாட்டம் செய்த தோழிகளைச் சமாளித்து விட்டு கடற்கரைக்குப் போனாள். நீண்ட நாள் பிரிந்து இருந்துவிட்டது போலிருந்தது. ஓடிப்போய் நீரில் கால் வைத்தாள். அம்மாவின் அருகாமையாய் அது குளிர்ந்தது. கடற்காற்று அம்மாவின் மென்மையுடன் தலை கோதியது. தூரத்தில் அலைகள் அம்மாவின் சிரிப்பைப் போல் நுரைகளுடன் கரை சேர்ந்தன. எங்குமே அம்மா நிறைந்திருப்பதாய்ப் பட்டது. கடலும் ஒரு தாய்தானே.

கரையோரமாக எங்கோ போய்விட்டு வந்து கொண்டிருந்த பொறுப்பாளர் அவளைக் கண்டு கூப்பிட்டார்.

"ஓமம்மா"

சொல்லி விட்டு நாக்கைக் கடித்தாள் அவள். நல்லவேளை, பக்கத்தில் யாருமில்லை. கடலின் இரைச்சலில் பொறுப்பாளருக்கும் சரியாக விளங்கியிருக்க வாய்ப்பில்லை. ●

# பயனற்றவர்களாகி

தமிழில் - செல்வி

பீஜிங்கில் தேனீக்கடை ஒன்றில் பணிபுரியும் சியாவோ வாங் தனது கதையைக் கூறுகின்ற பொழுது அவளது விழிகளில் நீர் முட்டியது. 1999இல் இந்த இளம் ஒப்பனையாளர் சீனாவின் வட- கிழக்கில் சாங்ஷினிலுள்ள தனது வீட்டை விட்டு சீனத்தலைநகருக்கு ஒளிமயமான எதிர்காலத்தைத் தேடி வந்தாள் 3 வருடங்களாக குறைந்த ஊதியத்தில் சிறு சிறு வேலைகள் புரிந்த இந்த 23 வயது சாங்ஷின் வாசிக்கு கையில் பணமோ, செய்வதற்கு எதுவித வேலையுமோ தற்போது இல்லை. அவள் சிறிது சிறிதாக சேமித்து வைத்திருந்த தொகையும் சிறுநீரக நோய்க்கான வைத்தியத்திலும் அன்றாடச்செலவுகளிலும் கரைந்து விட்டது. தனிமை, வறுமை இவற்றைவிட அடுத்ததாக என்ன செய்யப் போகிறாளென அவளுக்கே தெரியாத நிலை. ஆனால் ஒன்று மட்டும் தெளிவானது. இந்தப் பெரிய நகரத்தில் அவளுக்கு எவ்வளவுதான் கஸ்ரங்கள் வந்தாலும் தனது சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லும் எண்ணம் அவளுக்குக் கிடையாது. அங்கு இன்னும் நிலைமை மோசமானதாக இருக்கும்."எனது பழைய வீட்டுக்கு திரும்பிச்செல்லும் நோக்கம் எனக்கில்லை. நான் அவ்வாறு போனாலும் அங்கு வேலையெதுவுமே கிடைக்கப்போவதில்லை" என்று கூறுகிறாள் வாங்

சீனாவின் வட-கிழக்குத் திசையிலுள்ள இந்நகரங்கள் பழைய கம்யூனிச சீனாவின் முக்கிய நகரங்களாகும். இங்கிருந்த அரசிற்கு சொந்தமான எண்ணெய்க்





கிணறுகள், உற்பத்திக்கம்பனிகள், உருக்கு ஆலைகள் என்பவை பொருளாதார நெருக்கடி காரணமாக மூட வேண்டிய நிலையேற்பட்டது. தொழிற்சாலைகள் மூடப்பட்டமை, பாரியளவு தொழிலாளர் பணி நீக்கம் செய்யப்பட்டமை ஆகியவற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பெண்களின் வாழ்வில் இரட்டைச் சுமையாகியது. திடீரென சந்தைப் பொருளாதாரத்துக்கு மாறியமை தேர்ச்சி பெறாத, பயிற்சியற்ற, அடிமட்ட வேலைகளைச் செய்துவந்த சீனப் பெண்களை வெகுவாகப் பாதித்தது. "ஹர்பினிலுள்ள ஒவ்வொருவரும் வேலையற்ற அநேக பெண் உறவினர்களைக் கொண்டுள்ளனர்" என்று முறையிடுகிறார் இதுவரை இரண்டு தடவை பணிநீக்கம் செய்யப்பட்ட ஹெய்லோங்ஜியாங் வாசியான லீ சின்சூ. "எனக்குத் தெரிந்த பெண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வேலையற்றவர்களாக இருக்கின்றனர்"என்று கூறுகிறார் ஐ.நா. வின் பெண்கள் அபிவிருத்திக்கான நிதியத்தின்(UNIFEM) வட-கிழக்கு ஆசியாவுக்கான ஆலோசகர் சென் லான் யான். கணவனும் மனைவியும் ஒரே தொழிற்சாலையில் வேலை செய்யும் பட்சத்தில் மனைவியை வேலையிலிருந்து நீக்கினாலும் கணவன் தொடர்ந்தும் குடும்பத்துக்காக உழைக்க முடியும் என கம்பனி முகாமையாளர்கள் நம்புவதாக அவர் மேலும் கூறினார். ஆண்கள் பெருமளவில் வேலைநீக்கம் செய்யப்படுவது சமுதாயத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் என சில தொழிற்சாலைகள் கருதுவதாக அரச சார்பற்ற நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனவே சியாவோ யாங் போன்ற இளம் பெண்கள் புதிய வாழ்வைத் தேடி சீனாவின் ஏனைய பகுதிகளுக்கு செல்வது ஆச்சரியமானதல்ல.

ஆனால் எல்லோரும் அவ்வாறு போய்விடவில்லை. அதிகரித்து வரும் வேலையற்ற பெண்கள் படை பின்னேரங்களில் ஹர்பின் நகரத்தில் கூடிவிடுகிறது. சொங்ஜியாங் ஆற்றங்கரையிலுள்ள பூங்காவில் பல வேலையற்ற பெண்கள் குளிர்பானத்துடனும் சிற்றுண்டிகளுடனும் தமது பொழுதைக் கழிக்கின்றனர். இன்னும் பலர் விலைகுறைந்த அலங்காரப் பொருட்கள் கைப்பணிப் பொருட்கள் ஆகியவற்றுடன் சுற்றுலாப் பயணிகளை நாடிச் செல்கின்றனர். இவர்கள் எல்லோரும் 40 வயதுக்குமேற்பட்டவர்கள். வட-கிழக்கு சீனாவில் பெண்களின் ஓய்வு பெறும் வயது 40 ஆக குறைந்துள்ளது. அந்தப் பூங்காவில் வளையல்கள் விற்கும் சியா "நான் ஒரு போதும் வேலை தேடுவது பற்றி சிந்திப்பதுகூட இல்லை" என்று கூறுகிறாள். ஒருவருக்கு 40 வயதுக்கு மேலாகிவிட்டபின் அவரிடம் திறமையோ, கல்வியறிவோ இல்லாதுவிடின் எவருமே தேடமாட்டார்கள். பல பெண்கள் சிறிதளவு பணத்தைத் தேடிக்கொள்வதற்காக எந்த வகையான வேலையைச் செய்வதற்கும் தயாராக இருக்கிறார்கள். 1992இல் தொழிற்சாலை வேலையிலிருந்து நீக்கப்பட்ட லீ "நான் எல்லா வகையான வேலையையும் செய்து விட்டேன்" என்று கூறுகிறாள். ஆண்கள் இவ்வாறான வேலைகளைச் செய்வதற்கு விரும்பமாட்டார்கள். ஆனால் இத்தகைய பொருட்களை விற்பதற்கு இதுதான் உகந்த காலம். ரஷ்ய எல்லையிலுள்ள ஹெய்லோங்ஜியாங் இல் மழைக்காலம் தொடங்கிவிட்டால் இந்தப் பெண்கள் அவர்களது வாடிக்கையாளர்களிலிருந்து வீட்டிற்குள் முடங்க வேண்டிவரும்.

இருந்தும் அவர்கள் அதிஷ்டசாலிகளாகவும் இருக்கலாம். குறுகிய சந்துகளில் வரிசையாகவுள்ள சிறிய கடைகளுக்கு முன்பாக தனியார் வேலைமுகவர்களையும் சுவரின் ஒவ்வொரு இஞ்சியிலும் காணப்படும் விளம்பரங்களை நூற்றுக்கணக்கானோர் நின்று வாசிப்பதையும் காணலாம். பெண்களுக்கான வேலைகளில் அநேகமானவை சுத்திகரிப்பாளர்கள், பணிப்பெண்கள், விடுதி வேலையாளர்கள் போன்ற மாதத்துக்கு 350-600 யுவான் ஊதியம் பெறக்கூடிய வேலைகளே. ஆனால் எது உண்மையான வேலையைக் குறிக்கிறது என்பதை அறிந்து கொள்வது மிகவும் கடினமானது. தனியார் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் ஒழுங்கற்றனவாகவும் பெண்களை வேட்டையாடுவனவாகவும் காணப்படுகின்றன."விளம்பரத்தைப் பார்க்கும்போது வேலை தேடும் ஒரு பெண் உயர்ந்த ஊதியம் கிடைக்கும் நாகரிகமான ஒரு வேலையென்றே எண்ணுகிறாள்" என்கிறாள் UNIFEM ஐச் சேர்ந்த சென். அவள் அந்த வேலை முகவருடன் தொடர்பு கொண்டு தனது கட்டுப்பணத்தைக் கட்டிய பின்னரே தான் பலவந்தமாக வேலை செய்விப்பதற்கு கடத்தப்படப்பட்டுள்ளதை உணர்கிறாள்.

இந்த ஆபத்தை எதிர்நோக்க விரும்பாதவர்களுக்கு ஏனைய தெரிவுகளும் உண்டு. தற்போது 1000க் கணக்கான வடக்குப் பெண்கள் பீஜிங்கிலிருந்து தெற்கில் குவாங்டங் வரை, மேற்கில் திபெத்தில் கூட விபச்சாரிகளாக வேலை செய்வதைக் காணலாம்."ஒருவர் அவர்களுக்குப் பின்னே சிறந்த ஆடைகளையும் விலையுயர்ந்த ஆபரணங்களையும் அணிந்து கொண்டு வந்தால் அவர்களை கவர்ந்து விடலாம். ஏனெனில் அவற்றை அவர்கள் ஒருபோதுமே கண்டதில்லை" என்கிறாள் முன்னாள் ஒப்பனையாளரான யாங் யாங் அவர்களிடம் கல்வியறிவோ, வேறு திறமையோ இல்லாத காரணத்தால் வேறு வழி இருக்கவில்லை. ஏவல் பணிப்பெண்களாக வேலை செய்வோரின் தொகை பாரியளவில் அதிகரித்துள்ளதுடன் விபச்சாரிகளை அதிகளவு உருவாக்குமிடம் என்ற பெயரையும் வட-கிழக்கு சீனா பெற்றுள்ளது. அண்மையில் வடக்கைச் சேர்ந்த ஒருவரை பீஜிங்கில் வைத்து அவர் எவ்விடத்தைச் சேர்ந்தவர் என வினாவியபோது 'சென்யாங்' என்று பதிலளித்த அவர் அவசர அவசரமாக 'ஆனால் நான் அந்தப் பெண்களில் ஒருவர் என நினைத்து விடாதீர்கள்' என்று கூறினார்.

மக்களிடையே தமது கட்சியின் நற்பெயரைப் பாதிக்கின்ற தொழிலாளர் பிரச்சினையை எவ்வாறு கையாளுவது என கம்யூனிச கட்சி கவலை கொண்டுள்ளது. தொழிலாளருடைய கிளர்ச்சி பற்றியே பீஜிங் தற்போது அதிக கவனம் செலுத்துவதாக கூறப்படுகிறது. உலக வர்த்தக நிறுவனத்துடன் சீனா இணைந்த பின்னர் வேலையில்லாப் பிரச்சினை மேலும் மோசமடைவதுடன் வெளிநாடுகளின் போட்டியையும் எதிர்நோக்க நேரிடும் என பொருளியலாளர்கள் கூறுகின்றனர். உலக வர்த்தக நிறுவனத்தில் சீனா அங்கத்துவமாவதன் மூலம் கிடைக்கின்ற புதிய வேலைகளும் உயர் தொழினுட்ப அறிவும் அனுபவமும் தேவையாகின்றது. இது வட-கிழக்கைச் சேர்ந்த பெண்களுக்கு மேலும் கவலை தரும் செய்தியாகும். மாஓ சேதுங் முன்பொருதடவை பெண்கள் வானத்தின் பாதியைத் தாங்குவதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அது அப்போது உண்மையாக இருந்திருக்கலாம். ஏனெனில் இப்போது சீனப் பெண்கள் விற்பனைக்கான அலங்காரப் பொருட்களைத் தவிர வேறெதையும் தாங்கிச் செல்லவில்லை.

*நன்றி - Newsweek.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஷஷஇந்தக் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கின்றதோ அன்றுதான் எமக்கு விடிவு பிறக்கும்''

லெப். கேணல் திலீபனின் உரையைச் சுமந்த காற்று கோட்டையிலே கம்பீரமாக பறந்து கொண்டிருந்த புலிக்கொடியைத் தழுவி வீசியது. மகிழ்ச்சி, பெருமிதம், இன்னும் இனம் புரியாத உணர்வுகள் எல்லாம் கலந்த ஒரு உணர்வில் தமிழர்கள் ஊறிப்போயினர்.

ஷஜீவன்' கானகப் பாசறை வெற்றியைக் கொண்டாடியது. லெப். கேணல் மாதவி (பின்நாட்களில் கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி) யிடம் படையியற் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருந்த மகளிர் படையணியின் அந்த அணிக்கு, தாம் பயிற்சி முடித்துப் போய் அடித்துத்தான் கோட்டையைப் பிடிப்போம் என்று சொல்லிச் சொல்லி பயிற்சி எடுத்த அந்த அணிக்கு வெற்றிக் களிப்பையும் மீறி கவலை வந்தது.

ஷஷஎப்போது எங்களுக்குச் சண்டை?''

எல்லோர் மனதிலும் இதே கேள்விதான்.

ஷஷநீங்கள் வரப்போறீங்கள் எண்ட பயத்திலேயே அவன் ஓடி விட்டான்.'' பயிற்சியாசிரியர்கள் கேலி செய்தனர்.

ஷஷநாங்கள் போக முதலே இப்பிடியெண்டால், போயிருந்தால் என்ன நடந்திருக்கும்''

என்று வீரம் பேசிச் சமாளித்துக் கொண்டனர் லெப்.கேணல் நிர்மா முதலான பயிற்சியாளர்கள் சண்டை ஒன்று வராமலா போகும் என்று தம்மை ஆறுதற்படுத்திக் கொண்டனர்.

அது இரண்டாம் ஈழப்போர்க் காலம். களங்கள் விரிந்திருந்தன.

பலாலிப் படைத்தளம் போராளிகளால் காவலிடப்பட்டது. கட்டுவன், வீமன்காமம் போன்ற பகுதிகளில் நிர்மாவும் நின்றார். இயல்பிலேயே ஆளுமையைக் கொண்டிருந்த நிர்மா ஆரம்பத்திலேயே சிறு அணியொன்றின் இரண்டாவது பொறுப்பாளராக நியமிக் கப்பட்டார். எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரிதும் பேசப்பட்ட எமது முதலாவது மரபு வழிமுறைப் போரான ஆனையிறவுத் தளம்மீதான ஆகாய கடல் வெளிச்சமருக்கும் அணியொன்றின் இரண்டாவது பொறுப்பாளராகவே போயிருந்தார்.

ஆனையிறவு எமது கையில் விழாமல் தடுக்குமுகமாக வெற்றிலைக் கேணியில் தரையிறங்கி, ஆனையிறவு நோக்கி நகர்ந்த படையினரை வழிமறித்து வழிமறித்து நடந்த சண்டைகளின்போது புல்லாவெளியில் காயமடைந்தார்.

காயம் ஆறியதும் கண்ணி வெடிகள் தொடர்பான சிறப்புப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டார். விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதலாவது கண்ணிவெடி அணியாகப் பயிற்சி முடித்து எமது அமைப்பின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்ட சின்னங்களுடன் பணி செய்வதற்காய் வெளியேறினார்.

அதன் பின் தொடர்ந்த கஜபார எதிர் நடவடிக்கை (1992), பலவேகய - 02 எதிர் நடவடிக்கை (1992) என்றவாறாக அவரின் களங்கள் தொடர்ந்தன.

1992இல் தொண்டமானாற்றி லிருந்து ஒட்டகப்புலம் வரையான 150 காவலரண்கள் தகர்ப்பு நடவடிக்கைக்கு முன்னரான ஒழுங்கமைப்புக்களின்போது பகல்நேர அவதானிப்புக்கென ஒரு பகுதி நிர்மாவிடம் கொடுக்கப்பட்டிருந்தது. இரவு நேரங்களில் எமது வேவு அணிகளுடன் முன்னகர்ந்து, தாக்குதல் அணிகள் உள்நுழையவுள்ள பாதைகளில் கிடக்கும் எதிரிகளின் கண்ணிகளை அகற்றுதல், பகலில் தொடர்ச்சியாக மழையில் நனைந்து வெயிலில் காய்ந்தவாறு அவதானித்தல், மறுபடி இரவு கண்ணிவெடி அகற்றல் என்று கடைசி ஐந்தாறு நாட்களிலும் ஓய்வேயில்லாத கடும் பணி.

இடையில் நிர்மாவின் அணியை வந்து பார்த்த நிர்மாவின் பொறுப்பாளர், எல்லோரையுமே பின்னணிக்குப் போய்க் குளித்துவிட்டு வருமாறு பணித்தார். பகல் நேர அவதானிப்புத்தானே என்று முழுப் பேருமே போகாமல் தன்னோடு ஒருவரை நிறுத்திக்கொண்டு ஏனையவர்களைக் குளிக்க அனுப்பினார் நிர்மா. சண்டை தொடங்க இன்னும் ஓரிரண்டு நாட்களே இருக்கும் போது தமது கவனக்குறைவால் ஏற்படப்போகும் சிறு தவறுகூட நடவடிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் அவர் மிகக் கவனமாகவே இருந்தார். நிலைமை சிக்கலில்லை என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு நிர்மாவுடையது. பலாலி விமானத் தளப் பகுதியினுள் பகலில் நடமாட்டம் கூடுதலாக இருப்பதால், சாப்பிடு வதற்குக்கூட மரத்தை விட்டு இறங்காமல் தொலைநோக்குக் கருவியால் அவதானித் தவாறே இருந்தார்.

சண்டை தொடங்கும்போது நிர்மாவுக்கு பின்னணியில் நின்று காயக்காரர்களை வெளியேற்றும் பணி கொடுக்கப்பட்டிருந்தது. நேரடியாகச் சண்டையில் தன் பங்கு இல்லை என்பது நிர்மாவால் ஏற்றுக்கொள்ளமுடியாததாக இருந்தது. இருளில் நகர்ந்து கொண்டிருந்த அணிகளுடன் சேர்ந்து நகரத் தொடங்கிய நிர்மாவை அவரின் பொறுப்பாளரின் கூர்மையான விழிகள் கண்டுகொண்டன. உடனடியாகவே ஆளைப் பின்னணிக்கு அனுப்பி விட்டார்.

சண்டை தொடங்கி முதற்தொகுதி காயக்காரர்களைப் பின்னணிக்கு நகர்த்திக் கொடுத்து விட்டு காவும்குழு மறுமுறை முன்னணிக்கு நகர்ந்தபோது நிர்மா அவர்களோடு இணைந்து கொண்டார்.

1993 இல் ஆனையிறவிலிருந்து ஷ யாழ்தேவி ' நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் விடுதலைப் புலிகளின் போர் அணிகளால் முறியடிக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்ட வழியெங்கும் படையினர் விதைத்துச் சென்ற கண்ணிகளை அகற்றும் பணியில் நிர்மாவின் அணியும் ஈடுபட்டது.

கண்ணிகளை அகற்றும்போது, வெடிக்காமல் விழுந்து கிடந்த எறிகணை களையும் அகற்றினர். எறிகணைகளைக் கையாளுவது வேறு தனியான அணியினரின் வேலையாக இருந்தபோதும், அது மக்கள் வாழ்ந்த பகுதி என்பதால் திடீரென வருகின்ற மக்களுக்கு ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தவிர்க்க முயன்றார் நிர்மா. தன் அணியினரைக்கூட அனுமதிக்காது தானே எறிகணைகளை அகற்றினார்.

வேலைகளைப் பார்வையிட வந்த பொறுப்பாளர் நிர்மாவை மிகவும் கண்டித்து,

ஷஷவெடிக்காமல் கிடக்கும் எறிகணைகளை எடுக்க உங்களுக்கு அனுமதியே இல்லை''

என்று கடுமையாகச் சொல்லும் வரை நிர்மா எறிகணைகளையும் சேர்த்தே அகற்றினார். அதன் பின் எறிகணைகளருகே அடையாளத்துக்காகத் தடிகளைக் குத்தி விட்டு, எழுதுமட்டுவாளிலிருந்து கறுக்காய் வரையான பகுதிக்குள் கண்ணிவெடிகளை அகற்றினார்.


ஆனால் அந்த வேலை முடிந்ததும் தானாகவே பொறுப்பாளரிடம் கேட்டு, வெடிக்காத எறிகணைகளை அகற்றும் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். இதுதான் நிர்மா. தனக்குத் தெரியாது என்று எதையுமே விட்டு வைக்க எப்போதுமே அவர் விரும்பியதில்லை.

இதன் பின் பூநகரிப் படைத்தளம் மீதான ஷதவளை' நடவடிக்கையில் பங்கு கொண்டு, அங்கும் கண்ணிவெடிகளை அகற்றும் பணி செய்தார்.

இவரது பணியைப் பல களங்கள் வேண்டி நின்றன. சூரியக் கதிர் - 01 எதிர் நடவடிக்கைக் களமுனையில் கண்ணிகளை விதைக்கும் பணியை இவரின் அணி செய்தது. அது மிகவும் நெருக்கடி மிகுந்த களம். ஒவ்வொரு நாளும் களமுனை இடம் மாறிக்கொண்டேயிருக்கும். சண்டையின் நிலைமைக்கேற்ப, சண்டையணிகளின் நகர்வுக்கேற்ப நிலக்கண்ணிகளை விதைப் பதும், வரைபடத்தில் குறிப்பதும், அணிகள் இடம் மாறும்போது அகற்றுவதும், மறுபடி விதைப்பதுமாக மிகச் சிரமமான பணி அது. கண்ணிவெடி அணியினரின் கைகள் காய்த்து விட்டிருந்தன. இடர்கள் நிறைந்த சூரியக் கதிர் - 01 களமுனையில் நிர்மா காயமடைந்தார்.

காயம் ஆறிய பின் புதிய அணி ஒன்றுக்கு கண்ணிவெடிகள் பற்றிய பயிற்சிகளை வழங்கும் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கையில், சூரியக் கதிர் - 02 களம் நிர்மாவை அழைத்தது.

மூன்றாம் ஈழப்போரில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய ஓயாத அலைகள் - 01 முல்லை மீட்புச் சமர் மூலம் மீட்கப்பட்ட நிலப்பரப்பெங்கும் அங்குலம்,



**லெப்.கேணல் நிர்மா**
மேரிசாந்தினி ஞானானந்தம்
கிளிநொச்சி
பிறப்பு - 1973.09.23
வீரச்சாவு - 2001.04.28

அங்குலமாகத் தடவி ஆயிரம் ஆயிரம் கண்ணிகளை அகற்றி, பயமின்றி மக்கள் நடமாட வழிவகுத்த பெரும் பணியில் நிர்மாவின் பங்கு முக்கியமானது.

வெற்றி நிச்சயம் எதிர் நடவடிக் கைச் சமர்முனையில் கண்ணி வெடிப் பிரிவின் பகுதிப் பொறுப்பாளராகப் பணியாற்றிய கடினமான அந்த நாட்கள்...

ஓயாத அலைகள் - 02 கிளிநொச்சி மீட்பு நடவடிக்கையில் ஒரு வரையறுக் கப்பட்ட பகுதியின் கண்ணிவெடிப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். எறிகணை வீச்சிலே தலையில் காயமடைந்தார்.

தொடர்ந்தும் எறிகணை வீச்சிலேயே நிர்மா காயமடைவதைத் தோழிகள் கேலி செய்தார்கள்.

ஷஷஎறிகணைக்கு என்மேல் அத்தனை அக்கறை. அதுதான் தேடிவருகிறது.''

என்று சிரித்தார் நிர்மா.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியோடு இருந்த கண்ணிவெடி அணி, பின் மாலதி படையணியின் கண்ணிவெடிப் பிரிவாகி, பின் 1999. 04. 28 இல் **லெப். கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி மகளிர் அணியாகப் புதுத்தோற்றம்** பெற்ற போது நிர்மா அந்த அணியின் 2வது பொறுப்பாளராக எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

லெப். கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி அணியை விரிவாக்கம் செய்யவென வந்திருந்த புதிய போராளி களின் தொடக்க படையியற் பயிற்சியையும், மேலதிக சிறப்புப் பயிற்சியையும் நேரடிப் பொறுப்பெடுத்துச் செய்தார். இன்று களமெங்கும் பரந்து நிற்கும் கண்ணிவெடி மகளிர் அணியின் அத்திவாரம் சின்னச்சின்ன விடயங்களில் கூட கவனமெடுத்து நிர்மா போட்ட அத்திவாரமே.

15ம் பக்கம் பார்க்க

-செந்தூர நிலா-

**இப்படி இப்படியெல்லாம் கண்ணிகளை விதைக்குமாறு எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் தயாரித்த திட்டத்தை, தனது அணியினரை வைத்துச் செவ்வனே செய்து முடித்த நிர்மா, எறிகணைகளாலேயே எப்போதும் காயமடைகின்ற நிர்மா, "எறிகணைகளுக்கு என்மேல் அவ்வளவு அக்கறை. அதுதான் தேடி வருகின்றது" என்று சிரிக்கின்ற நிர்மாவைத்தேடி அந்த எறிகணை, கடைசி எறிகணை வந்தது.**

www.tamilarangam.net



நீயும் நானும் சமர்க்களத்தில்
எதிரெதிரே இருந்தோம்.
உனது சுடுகுழல் என்னைப் பார்த்திருக்க
எனது சுடுகலன் உன்னைக் குறிவைக்க
என்னை நீயும் உன்னை நானும்
கவனித்தபடியே எம் காப்பரண் வாழ்வு
ஓடிக் கழிந்தது.
எனது ஊர் பிடிக்கும்
கடமை சுமந்து என்னைக் கொல்ல வரும்
உன்னை முன்னேற விடாத
எனது காவல்.
சமர்க்களமொன்றில் கட்டுடைத்துப் பாய்ந்து
ஆறாய்ப் பெருகிய
என் குருதிக்கு
உனது ரவையொன்றுதான்
காரணமாக இருந்திருக்கலாம்.
எனதருகே காவலிருந்த தோழி
கண்ணொன்றைப் பறி கொடுக்க
நீதான் சிலவேளை சுடுகுழல் இயக்கியிருப்பாய்.

உனது குழுத்தலைவன் தப்பியோடிய
அன்றைய பாரிய மோதலொன்றில்
எனது குழுத்தலைவி
மண்ணுள் விழி மூடிப்போனாள்.
அவளின் புகழுடலுக்கு ஊர்ச்சனம்
மண்போட்ட அன்று
உங்களது பண்டாவும், சமரவீராவும்
நீங்கள் வெட்டித் தறித்த
தென்னந் தோப்புக்கே
உரமாகிப் போயினர்.
அர்த்தமுள்ள எம் சாவுக்குப் பின்னால்
அருகதையின்றிப் போயிற்று
உன் மாந்தர் உயிர்கள்.

சாவுகளை எம் அருகில்
உறங்க விட்டு நாம் விழித்திருக்க
நீயும் உன்னவரும் அதை
எதிர் கொள்ளப் பயந்து விழித்திருக்க
நித்திரையற்ற எத்தனை இரவுகளில்
விடுமுறையில் போய்த்திரும்பியே வராத
நினைப்போடு நீயும்,
என் உறவுகள் ஊர் போகும்
கனவோடு நானும்
கண் விழித்திருப்போம்.

வெடிமுழக்கச் செய்தி கேட்டு
உனது சுஜாதா விகாரைக்குச் செல்வாள்
எனது அம்மாவும்
தேங்காய், கற்பூரம், பூக்கள் சகிதம்
அரசடிப் பிள்ளையாருக்கு முன்னால்
பிரதட்டை பண்ணியிருப்பாள்.
எப்படி இவற்றையெல்லாம்
சுலபமாக மறக்கமுடியும் பகைவீரா!
இவ்வளவு நாளும்
உயிருடனிருக்கிறேன் என்பதையே
நம்ப முடியாமலிருக்கிறது எனக்கு.

இப்போது நீயும் நானும்
சில மீற்றர் தூரங்களில்
சிரித்தபடியே பார்த்திருக்கிறோம்.
உனது சாவடி தாண்டி வரும் எம்மவரை
சோதனையிட்டுப்
புன்னகையொன்றை வெளியிட்டபடி
போகச் சொல்கிறாய்.
காலம் தான் எவ்வளவு மாறிவிட்டது பார்த்தாயா?
என்னையும் உன்னையும்
வழிநடத்திய தளபதிகள்
ஒரே மேசையில் உட்கார்ந்து பேச,
உன்னூருக்கு என் சனமும்
என்னூரில் உன் உறவுகளும்
சுற்றுலா மேற்கொள்ள
எதிரெதிரே இருந்தவரை
அருகருகே வைத்துள்ளதே இக்காலம்.
ஆட்சியும் அரசும்
மாறி மாறிக் கழிய
என் மாந்தர் துயருக்காய் நானும்
உன் உறவுகளின் பசிபோக்க நீயும்
காப்பரண் வேலிக்கு வந்திருந்தோம்.
இப்போது சமாதானக் கனவில்
அதிகம் மகிழ்ந்திருப்பது
நீதான் என்று எனக்குத் தெரியும்.
நித்திய சாவும் பூரணவாழ்வுமாய்
இருந்த உனக்கொரு இடைவெளி.

கார்த்திகை வந்துள்ளது
கண் மழையுள் எமை வீழ்த்திய
காலங்களை விரட்டிய
எம் வீரர்களுக்குச் சுடரேற்ற
கல்லறைக்குச் செல்லவுள்ளேன் நான்.
நீயெப்படி......
இன்னமும் கம்பி வேலிக்குள்ளா
காலத்தைக் கடத்துகிறாய்.
இவ்வுடல் மண்வீழும் வரைக்கும்
விடுதலைக்காகவே வாழ்கிறேன் நான்.
உயிர்விடும் கடைசித் துளிவரை
அச்சத்துடன் கழிகிறதே உன்வாழ்வு.
உனது துப்பாக்கியும்
எனது சுடுகுழலும்
இப்போது மௌனித்திருக்கிறது.
தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிகளில்
சிரத்தையாயுள்ளது எம்கரங்கள்.

எப்போதும் சுடுகுழல் காவித்திரியும்
சுமை கொண்ட வாழ்வுக்குச்
சொந்தக்காரனே
உனக்காய் யார் ஏது செய்தார்கள்?
எங்கள் தலைவனின் காலத்தில்
விடியும் நாளுக்காய்
கனவுகள் சுமந்தபடி
ஊர்போக முடியாது காத்திருக்கும்
எம் தமிழர் வீடுகளில்
பாதுகாக்கப்பட்டிருக்கிறதா உன்
வாழ்வு?
இரு.
எமது இயல்பு வாழ்வுக்காய்
எதையும் செய்வதை விரும்பாதவர்கள்
உனது முள்வேலி வாழ்க்கைக்காவது
ஒரு முடிவு கட்டுவார்களா?

உனது சுஜாதாவுக்காக
இளநீர் சீவிப் பிழைப்பு நடத்த
இனியாவது காலம் உன்னை
அனுமதிக்கட்டும்.
பகைவீரா!
இந்த மண் உன்னைத்
தோழமையுடன் வழியனுப்பி
வைக்கவே விரும்புகின்றது.
நான்கு பேர் சுமக்க முடியாது
உப்பிப் பருத்த
வெற்றுடலாகவல்ல.

- அம்புலி -

www.tamilarangam.net



# மானுடத்தின் தமிழ்க்கூடல்
# நிகழ்வும் பகிர

நீண்ட நாட்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் விழாக்கோலம் பூண்டிருந்தது. தெருவெங்கும் அலங்கரிப்புக்கள், மஞ்சள் சிவப்பு நிறக் கொடிகள் காற்றில் அசைந்து கொண்டிருந்தன. போரின் காயங்களையும் துப்பாக்கிச் சன்னங்களின் சிதறல்களையும் தன்னில் கொண்ட வீரசிங்கம் மண்டபம் புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நிற்கிறது. தமிழன் இனவாத அரசுகளால் அடிபட்டதை, வதைபட்டதை எத்தனை தடவை அது மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

இதன் முன்றலில் உலகத்தமிழாராட்சி மகாநாட்டில் நடந்த கொடுமைகள்... எழுந்த ஓலங்கள்... இன்னும் எம் மனங்களிலிருந்து மறைந்து போகவில்லை. யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் நிகழ்ந்த ஆக்கிரமிப்புப் போரின் காயங்கள் இன்னமும் ஆறாத நிலையிலேயே இருக்கின்றன.

இந்த நிலையில்தான் இந்த யாழ்ப்பாண மண்ணில் வீரசிங்கம் மண்டபத்தில் "மானுட விடுதலை நோக்கிய திசையில், ஈழத்தமிழர் உரிமைப் போராட்டமும் கலை இலக்கிய ஊடகங்களின் வகிபாகமும்'' என்ற உட்கருத்தை மையமாகக் கொண்ட மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002 என்ற வரலாற்று நிகழ்வு ஒக்ரோபர் 19ம் திகதி ஆரம்பமானது. கலைபண்பாட்டுக்கழகம் நிதர்சனம் நிறுவனத்துடனும் தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடாத்தும் இந்த மகாநாட்டில் தமிழ் முஸ்லிம் சிங்கள இனங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கலை இலக்கியவாதிகள், ஆய்வாளர்கள், அரசியற் துறைப்பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டார்கள்.

ஈழத்தமிழர்கள் மீது அனுதாபம் கொண்டு இங்கு தமிழன் அடிபடும் போதெல்லாம் குரல் கொடுக்கும் மனித நேயமுள்ளவர்களும் தமிழ் நாட்டிலிருந்து வந்து கலந்து கொண்டார்கள். மலையகம் உட்பட தென்பகுதியிலிருந்து வந்து கலந்து கொண்ட பலருக்கு யாழ்ப்பாணம் புதிய தரிசனமாக இருந்தது. கிட்டத்தட்ட மூவாயிரம் பேர் கலந்து கொண்டு சிறப்பித்த இம் மகாநாட்டின் நிகழ்வுகள் கொடியேற்றலுடன் ஆரம்பமானது.

யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் கொடிக்கீதம் பாட, பாப்பா அவர்கள் கொடியை ஏற்றி வைத்தார். காதில் வந்து விழுந்த கீதத்தைக் கேட்டுக் கொண்டே காலை வெயிலில் இதமான காற்றில் கொடி அசைவதைப் பிரமிப்புடன் அனைவரும் பார்த்து நின்றனர். காற்றில் அசைந்த கொடி ஈழத்தமிழனின் கடந்து வந்த வரலாற்றை அவர்களுக்கு நினைவுபடுத்தியிருக்கக் கூடும்.

இந்த மகாநாட்டின் தொடக்க உரையை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பல முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டார். "ஈழத்தமிழர்களது உரிமைப் போரானது மானுட விடுதலை நோக்கிய திசையில் வந்தது, வருவது, வரப்போவது என்பதாகும். அடக்கு முறை எங்கு ஒலிக்கிறதோ அங்கெல்லாம் மானுடத்தின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும். மானுடத்தின் உணர்வுகளை நசுக்கும் போது போராட்டம் தோற்றம் பெறுகிறது. எமது தமிழ் மக்களின் போராட்டத்தின் தர்மத்தன்மைகள், உண்மைத் தன்மைகளை வெளி உலகுக்கு எடுத்துக்கூறும் ஒரு குரலாக இந்த மானுடத்தின் தமிழ்க்கூடல் அமையும்" என்று குறிப்பிட்டவர் தொடர்ந்து "தமிழ் மரபில் இதுவரை இல்லாத புதிய இலக்கியங்கள் கடந்த 25 வருடகாலமாக ஈழத்தில் எழுந்து கொண்டிருக்கின்றன. அனுபவங்களின் ஆழத்தை, உறவுகளின் மென்மையை, சோகத்தை தெளிவாக வெளிப்படுத்துவன காத்திரமான இலக்கியங்களே! இலக்கியங்கள் மொழி கடந்தாலும் மதிப்பிறக்கம் அடைவதில்லை. தமிழர் உரிமைப் போரின் அதிர்வுகள் கலை இலக்கியங்களில் தக்க சான்றுகளாக வெளிப்படுத்த வேண்டும்'' என்று குறிப்பிட்டவர் தொடர்ந்து ஒரு வேண்டுகோளையும் விடுத்தார்.

''எந்த ஒரு நடவடிக்கையையும் எந்தவொரு போராட்டங்களையும் புரிந்து கொள்ளலில்தான் நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. கலை இலக்கியம் என்பது மானுட இயல்பு நோக்கிய திசைகளில் வந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் ஊடகம் ஜனரஞ்சகம் பண்பாடு கொண்ட ஒரு விடயமாகும். ஊடகங்களுக்கு ஒரு முக்கியமான பொறுப்பு உள்ளது. அதாவது இந்தப் போராட்டம் மானுட விடுதலையின் அடிப்படையில் வருவது என்பது பற்றிச் சொல்லும் அந்த மையக்கருத்தை மக்களிடையே கொண்டு செல்வதும் மக்களிடையே பேணுவதும் மிக முக்கியமான ஒரு விடயமாகும். அந்தப் பணியை ஊடகங்கள் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும்.''



பேராசிரியரின் கருத்துரை மகாநாட்டின் நோக்கம் அதன் செயற்பாடுகள் பற்றியதாக அமைந்திருந்ததை அனைவரும் கர ஒலி மூலம் ஒப்புக் கொண்டார்கள்.

போராடி வாழ்ந்த தமிழனின் இன்றைய நிமிர்வு பற்றி நிலாந்தன் இப்படிக் குறிப்பிட்டார்.

"எழுபதுகளில் ஒரு முறை இதே மண்டப முன்றலில் தமிழ் மகாநாடு நடந்த போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு பல உயிர்கள் அழிக்கப்பட்டன. அதுபோல் இப்போது செய்து விட முடியாது. ஏனெனில் தமிழன் இப்போது பலமானவன். எழுபதுகளில் இருந்த தமிழன் இப்போது இல்லை. அவனுக்கென்று ஒரு பலம் உண்டு. அவன் மிகவும் விழிப்பு நிலையில் இருக்கிறான். அவனை இனி யாரும் வீழ்த்தி விடமுடியாது."

இந்தப் பேச்சு தமிழ் இனம் தம்மை பலம் பொருந்திய இனமாக வளர்த்துக் கொண்டதை பெருமிதத்துடன் குறிப்பிடுவதாய் அமைந்திருந்தது.

முதல் நாளின் நிறைவுரையை நிகழ்த்திய தமிழினியின் பேச்சு போராட்டத்தின் தேவையை நியாயப்படுத்துவதாகவும் அதன் மூலம் பெறப்படுகின்ற பெறுபேறுகள் பற்றியதாகவும் அதற்காகச் செய்கின்ற தியாகங்கள் பற்றியதாகவும் அமைந்திருந்தது. அவரின் உணர்வுபூர்வமானதும் உறுதியானதுமான உரை அனைவரது மனங்களையும் நெகிழ வைத்தது.

இந்த நான்கு நாள் மகாநாட்டில் நிறையப் பேர் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

"நாம் எமது மண்ணை மீட்கப் போராடும் அதேவேளை எமது மொழியையும் பாதுகாத்துக் கொள்வது அவசியம், எமது மொழித்தூய்மையை பேணாது விடில் எமது இனத்தின் சிதைவுக்கே அது வழி கோலிவிடும்'' என்று இளங்குமரன் அவர்களும் ''போராடினாலே தமிழனுக்கு வாழ்க்கை என்றாகிவிட்டது. அது அகிம்சை ரீதியான போராட்டமாக இருந்தாலும் சரி ஆயுத ரீதியிலான போராட்டமாயினும் சரி நாம் போராடியே ஆகவேண்டும். கடந்த கால வரலாற்றுத் தகவல்கள் இதனையே உணர்த்துகின்றன'' என்று சேரலாதன் அவர்களும் ''சிங்கள தேசத்தைப் பிடிப்பதற்காக நாம் போராடவில்லை, அவர்களது வாழ்விடங்களை பிடிப்பதற்கு நாம் செல்லவில்லை. நாம் சுதந்திரமாக வாழ இழந்த பிரதேசத்தை மீட்பதற்காக எங்களுடைய நிலத்தில் நிம்மதியாக வாழ்வதற்காக நாம் போராட நிர்ப்பந்திக்கப்பட்டோம்'' என்று பரா அவர்களும் முன்வைத்த கருத்துக்கள் கவனம் பெற்றன. தமிழன்பன் இந்தப் போராட்ட காலத்தில் தமது ஊடக வழியிலான பணிபற்றி குறிப்பிட்டார்.

இம் மகாநாட்டில் சிங்கள இனத்தைச் சேர்ந்த 4 பேர் கட்டுரைகளை வாசித்தார்கள். மொழிபெயர்வு அமர்வில் திரு. மடுளுகிரிய விஜேரத்தின 'இலக்கியத்தில் இனப்பிரச்சினை தமிழ் சிங்கள மொழிகளுக்கிடையிலான மொழியாக்க முயற்சிகள்' என்ற தலைப்பிலும், திரைப்படம் அமர்வில் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன 'சிங்கள தமிழ் முரண்பாடுகளின் வெளிப்பாடுகள்' என்ற தலைப்பிலும், ஊடகம் அமர்வில் 'ஹிரு' ஆசிரியபீடத்தைச் சேர்ந்த திரு. ரோகித பாஷன அபேவர்த்தன 'இனமுரண்பாடுகள் பற்றிய செய்தியளித்தல் - ஊடகவியலாளர் ஒருவரின் அனுபவம்' என்ற தலைப்பிலும் 'ராவய' ஆசிரியபீடத்தைச் சேர்ந்த திரு. மஞ்சுள வெடிவர்த்தனே 'இனஒடுக்கு முறையும் சிங்களப் பத்திரிகைகளும்' என்ற தலைப்பிலும் தமது உரைகளை நிகழ்த்தினர்.

பேரினவாத சாயல் படியாத இந்த மனித நேயமுள்ளவர்களின் கருத்துக்கள் இந்தக் காலகட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகிறது. மாறி மாறி வந்த இலங்கை அரசுகள் தமிழ் இனத்துக்கு செய்த அநியாயங்கள் பற்றி வருத்தப்பட்டார்கள். தங்கள் வேதனையை பகிரங்கமாக பகிர்ந்து கொண்டார்கள், தமிழரின் போராட்ட நியாயங்களைக் கூறுவதற்காகத் தங்கள் பணியை முன்னெடுக்கப் போவதாக

**- தாமரைச்செல்வி -**

உறுதியளித்தார்கள். அடக்கு முறைகளினால் அடிபட்டு நொந்துபோன தமிழர் உறுதியோடு நிமிர்ந்தது பற்றி ஆச்சரியப்பட்டார்கள்.

இதே ஆச்சரியம் தமிழ்நாட்டிலிருந்து வந்தவர்களிடமும் காணப்பட்டது. தமிழ் நாட்டில் இருந்து ஈழத்தமிழருக்காக குரல் கொடுத்ததற்காக பல கஷ்டங்களையும் அனுபவித்தவர்கள் இவர்கள். எதையும் பொருட்படுத்தாமல் மானுடத்தின் தமிழ்க்கூடலில் பங்கு பற்ற வேண்டும், இத்தனை இடிபாடுகளுக்குமிடையேயும் உயிர்ப்பு பெற்று நிமிர்ந்து வாழும் மக்களை சந்திக்கவேண்டும் என்ற ஆவலில் வந்தவர்கள் இவர்கள். "பேசும் மொழியாலும் வாழும் வாழ்வாலும் பெருமை கொள்ளத்தக்கவன் ஈழத்தமிழன்" என்ற அவர்களின் ஓங்கிய குரல் காற்றலை எங்கும் மோதித் தெறித்தது.

"உரிமை என்பது இரந்து பெறுவதில்லை அது போராடிப் பெறவேண்டிய ஒன்று" என்று தமிழினி கூறிய கருத்தையே அமைச்சர் பெ. சந்திரசேகரன் அவர்களும் கூறினார். ''மகாநாட்டில் வந்து கலந்து கொண்ட மலையக இளைஞர்கள் உங்கள் பிரச்சினைகளை மலையகத்தில் போய் பேசுவர்" என்றும் குறிப்பிட்டார்.

'சர்வதேச அரசியலும் சிங்கள உயர்குழாமும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய திரு.மு.திருநாவுக்கரசு அவர்கள் மிகவும் விரிவான அரசியல் பின்புலத்தை ஆழமாக அலசினார்.

இம் மகாநாட்டின் இறுதி நாளில் திரு.புதுவை இரத்தினதுரை நிறைவுரையை மிகவும் உணர்வுபூர்வமாக நிகழ்த்தினார். ''கடந்த கால பேதங்களை மறந்து அனைவரும் ஒன்று சேர்ந்து மானுடம் நோக்கிய திசையில் கலை இலக்கியப் படைப்புக்களை நகர்த்திச் செல்வோம்" என அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரகடனங்கள் அனைவரதும் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றிருந்தன. தமிழ் மக்களின் விடுதலையை எல்லாத் தளங்களிலும் முழுமைப்படுத்துவது. இதில் உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் ஒருங்கிணைப்பைப் பெறுவது, இரண்டாயிரம் ஆண்டு கால செய்யுள் பாரம்பரிய முறையில் தமிழ் மக்களாகிய நாம் தமிழ் விழிப்பையும் தமிழ் வேர்களையும் மூன்றாவது மிலேனியத்திற்கும் தகவல் யுகத்திற்கும் விரிவுபடுத்தல். இந்த இரண்டு முதன்மைப் பிரகடனங்களையும் நிறைவேற்றுவதற்கு உரிய முன்னெடுப்புக்களும் அறிவிக்கப்பட்டது. இதில் பிரதானமானது உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களை ஒருங்கிணைப்பதற்கான 'தமிழ் மையம்' ஒன்றை ஈழத்தில் நிறுவுவது.

மகாநாட்டின் இறுதியில் வருடம்தோறும் இத்தகைய தமிழ்க்கூடலை தொடர்ந்து ஒழுங்கு செய்து நடத்த வேண்டும் என்ற ஆவலும் தெரிவிக்கப்பட்டது.

இம் மகாநாட்டில் பல அமர்வுகள் இடம் பெற்றிருந்தன. கவிதை, சிறுகதை, குழந்தை இலக்கியம், நாவல், அரங்கு, மொழி பெயர்ப்பு, பொது அமர்வு, திரைப்படம், காண்பியக் கலைகள், ஊடகம் என பல அமர்வுகளிலும் பல அறிஞர்கள், இலக்கியவாதிகள் கட்டுரை படித்திருந்தார்கள். எல்லோருடைய உரைகளும் மானுடம் நோக்கிய திசையில் தமிழர் போராட்டத்தின் நியாயத்தை உணர்வதாகவும் சொல்லுவதாகவும் அமைந்திருந்ததை குறிப்பிட வேண்டியுள்ளது.

கடந்த 50 வருடகால வாழ்க்கையில் அரச அடக்கு முறைகளினால் அடிபட்டு, வதைபட்டு, அவலப்பட்டு நொந்து போயிருந்த ஈழத்தமிழரின் ஒருமித்த குரலை வெளிப்படுத்த இந்த மானுடத்தின் தமிழ்க்கூடல் வழிசமைத்திருக்கிறது என்பதே உண்மை. இந்த மானுடக் குரலின் அடிப்படை அம்சங்களை இனங்கண்டு அதை உலகறிய ஓங்கி ஒலிக்கச் செய்யும் வழிமுறைகளைக் கண்டறிய இந்த மானுடத்தின் தமிழ்க்கூடல் களம் அமைத்துத் தந்திருக்கிறது.

அடக்குமுறை யுத்தம் காரணமாக முகம் பார்க்க முடியாமல் இருந்தவர்கள் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டு இன மத பேதமற்ற நேசத்துடன் கைகுலுக்கிக் கொண்டது ஒரு மாற்றத்துக்குள்ளாக விரும்புகின்ற தன்மையை அடையாளம் காட்டுவதாக இருந்தது. உங்கள் துயரங்களைப் புரிந்து கொள்கிறோம். உங்கள் மானுட விடுதலையை நோக்கிய போராட்டத்தின் நியாயங்களை உணர்ந்து கொள்கிறோம் என்ற வாஞ்சை அந்த கைகுலுக்கல்களில் இருந்தது.

இனமத பேதமின்றி அறிஞர் பெருமக்கள் பல திசைகளிலிருந்தும் வந்து ஒன்று கூடி தமிழுக்கு மகுடம் சூட்டி மானுட விடுதலையைத் தேடி ஆய்வு நடத்தும் களமாக மகாநாடு அமைந்திருந்ததை பெருமையுடன் குறிப்பிடலாம்.

நான்கு நாட்களாக மானுடத்தின் குரல் ஓங்கி ஒலித்து அடங்கிவிட்டது. இனி இந்தக் குரல் பற்றி மற்றவர்கள் பேசத் தொடங்குவார்கள். அதில் இந்த மகாநாட்டின் வெற்றி உணரப்படும்.

❖



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தீச்சுடர்....

ஷஷஎன்னமாதிரி, இஞ்சால எங்களப்பற்றி என்ன கதைக்கினம். எங்கயெங்க பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கினம். எல்லா விபரமும் எடுத்தனீங்களே...''

ஷஷஇல்லைப் பிள்ளை இன்னும் முடியேல்ல இஞ்ச செத்த வீடொண்டு. இரண்டு பிள்ளையள் தாய் கல்லாத்தில முதலை கடிச்சுச் செத்துப் போனாள்.''

ஷஷஅட, பிள்ளையள் என்ன செய்யிது"

ஷஷஎங்க பிள்ளை, தேப்பன் முதலே விட்டிட்டுப் போட்டான். இப்ப ஆர் பிள்ளையளப் பாக்கிறது பேத்திக் கிழவியொண்டு இருக்குது. தானே பிச்சையெடுக்குது. பிள்ளையள என்னசெய்யப் போகுதோ. ம்..."

ஷஷஅம்மா அதுகளின்ர விபரத்தை எடணை. பிள்ளையள நாங்கள் கொண்டே படிப்பிக்கிறம். தருவினமே...''

ஷஷதராம... நான் கேட்டுச் சொல்லுறன்"

ஷஷஅப்ப நாங்கள் வெளிக்கிடுறம்.." என்றவாறு புறப்பட்ட நளாயினியும் ஜெனிற்றாவும் மீண்டும் கல்மடுவுக்கு இருபத்தாறு கிலோ மீற்றர் சைக்கிளோட வேண்டும். நேரத்தைக் கணித்தவர்கள் ஷஎப்பிடியும் இருளும்' என எண்ணினர்.

வாரிக்குட்டியூர் சந்திக்கு வந்தபோது ஷசின்ராசு' நின்றான்.

சென்றவாரம் அவனிடம் கொடுத்த இயக்க வெளியீடுகளுக்கான பணத்தைக் கொடுத்தவன்,

ஷஷஎன்னக்கா இஞ்சாலை குறுாப் வந்திருக்கு ஏதும் அடிபாடோ'' என்றான்.

ஷஷச்சாய் நாங்க கவனிக்கேல்ல" என்றவாறே அவர்கள் புறப்பட்டனர்.

சின்ராசு - நல்லவன். நிறைந்த தேசப்பற்றுள்ளவன். அவனது கிராமத்தவர்கள் அநேகமாக இந்தியாவுக்கோ வெளிநாட்டுக்கோ போய் விட்டனர். இவன் மட்டும் தன் மண்பற்றில் செத்தாலும் சொந்த மண்ணில்தான் சாகவேண்டும் என்று இங்கேயே தங்கி விட்டான். இப்போதும் போராளிகளுக்கு மிகவும் உதவியாக இருந்தான்.

மிதிவண்டி பூவரசங்குளம் கடந்து மேற்கே திரும்பி சேர்ச்சடிக்கு வர முன்சில்லு ஷீரென மெலிந்தது. அருகே இருந்த வட்டச் செயலகம் ஒரு கல்வீடு. மேற் கூரையின் ஓடுகளின் பெரும் பகுதியை பிரித்துக் கீழே அடுக்கியிருந்தது.

இது சிறிலங்கா விமானப் படையை ஏமாற்ற. ஏற்கனவே உடைந்த வீடு போலத் தோற்றமளித்த அந்த முகாம் வாசலில் லெப்.கேணல் சாள்ஸ் நின்றான். பின்நாளில் இவன் குமணன் என அழைக்கப்பட்டான். ஓயாத அலைகள் மூன்றில் வெற்றிலைக் கேணியில் வீரச்சாவடைந்தான்.

ஷஷஎன்னக்கா காத்துப் போட்டுதே... "என்றவன் ஷஷவிவேகன் இஞ்சை வா"என்று கூப்பிட்டான். நாங்கள் காலையில் செட்டிகுளம் சாலையில் சந்தித்த லெப்ரினன்ட் விவேகன் ஓடி வந்தான். ஷஷஇஞ்ச தாங்கோ'' என மிதிவண்டியை வாங்கியவன், அதை விரைவாகக்கொண்டு போய் ஒட்டிக் கொண்டு வந்தான்.

அரை மணித்தியாலம் தாமதமாகி விட்டது. யானைக்காட்டில் மாலைக்கருக்கலில் செல்வது பயம்தான். மீண்டும் பாதுகாப்பு நெம்பை விலக்கி ரவையறைக்கு ரவையை ஏற்றிய ஜெனிற்றா முன்னாகவும் நளாயினி பின்னாகவும் சைக்கிளோடினர். நெடுஞ்சாலை தான் என்றாலும் ஒற்றையடிப் பாதையே பயணத்துக்கு ஏற்றதாக இருந்தது. அதனால் ஒருவர் பின் ஒருவராகவே சென்றனர்.

கோயிற்புளியங்குளத்தைக் கடந்த போது நன்றாக இருட்டி விட்டது.

நாளைக்கு என்னென்ன வேலை எங்கெங்கு போக வேண்டும் என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டே போனார்கள்.

போகவர அம்பத்திரெண்டு கிலோ மீற்றர் சைக்கிளோட்டம். நல்ல களைப்பு. ஷஷபோன உடன் குளிச்சிட்டு...படுக்கப்போறன்."

ஷஷஅக்கா பத்து மணி வரைக்கும் படிக்கச் சொல்லுவா''

ஷஷஇப்ப எட்டுமணி போய்க் குளிக்க பத்துமணியாகீரும்...''

முகாமுக்கு அவர்கள் வந்தபோது முகாம் பொருட்கள் அனைத்தும் மூட்டை கட்டி வைக்கப்பட்டிருந்தது.

ஷஷஅக்காக்கள் வீட்டுக்காறர் வந்திட்டினம் வேறிடம் போறம்''

ஷஷஇப்பவோ..." நளாயினி ஏமாற்றத்தோடு கேட்டாள்.

ஷஷபின்ன. ராராவா மாறப்போறம்" ஜெனிற்றா கட்டி வைத்த மூடையொன்றில் பொத்தென அமர்ந்தாள். பொருட்களை ஏற்ற வாகனம் வந்தது. மீண்டும் உற்சாகத்தை வரவழைத்தவர்கள் பொருட்களை ஏற்றினார்கள்.

ஷஷ ஓய்வு ?" ஷஷஅதைப்பிறகு பாப்பம். போராளிகளுக்கு ஓய்வெதற்கு'' என்றாள் ஜெனிற்றா.

இன்னும் வரும்

---

## சாணைபோட....

ⓘ **உங்களின் விளையாட்டு ரீதியிலான இலட்சியம்தான் என்ன?**

எனது இத்தனை வருடகால விளையாட்டுக்களில் வெற்றிக் கிண்ணங்களையே கூடுதலாகப் பெற்றுள்ளேன். அதாவது பாடசாலை, கோட்டமட்டப் போட்டிகளின் போதே வெற்றிக்கிண்ணங்கள் கிடைக்கப் பெற்ற நான், தற்போது தேசிய மட்டத்தில் வெண்கலப்பதக்கத்தைப் பெற்றிருந்தாலும் கூட, இனிவரும் இப்படியான தேசிய மட்டப் போட்டிகளின் போது தங்கப் பதக்கங்களையே வென்று 'வெற்றிக் கிண்ணம்' பெறுவதே எனது இப்போதைய இலட்சியம்!

அவரின் இந்த இலட்சியக்கனவைச் சுமந்த வண்ணம் என்னைத் தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு அவரின் பெற்றோர், உற்றார் உறவினரை சந்தித்து உரையாடியதிலிருந்து...

முதலில் தாரணியின் தந்தை சீவரெட்ணம் அவர்களிடம்...

ⓘ **உங்கள் மகளிடம் கேட்டபொழுது, தனது இந்த நிலைக்கு காரணமானவர்கள் தனது பெற்றோர்தான் என்று கூறுகிறார். அதன்படி உங்கள் மகளிற்கு உங்களின் பங்களிப்பு (உதவிகள்) எந்த விதத்தில் அமைந்தது என்று சற்று விளக்கிக் கூறுங்களேன்?**

எனது மகளிற்கு சிறுவயதிலேயே விளையாட்டில் ஆர்வமும், திறமையும் இருந்ததை எவ்வாறு கண்டு பிடித்தேனென்றால், இவர் ஒரு விடயத்தை 'தன்னால் செய்ய முடியாது' என்று வந்து நிற்கும்பொழுது, நாங்கள் 'இல்லை உங்களால் இதைச் செய்ய முடியும். நாங்கள் உதவிக்கு இருக்கிறோம்' என்பது போன்ற உற்சாக வார்த்தைகளைக் கூறி அவரை ஊக்கப்படுத்தி, உற்சாகமூட்டும் பொழுது, வேகமாகவும் அதேநேரம் மிகவும் நேர்த்தியாகவும், சுத்தமாகவும் செய்ததை அவதானித்தேன்.

அதிலிருந்துதான் இவரை உற்சாகப்படுத்தி, ஒரு விளையாட்டு வீராங்கனையாக உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில், இன்றுவரை அவரிற்கு உதவியாகவுள்ளோம். இனியும் உதவியாக இருந்து ஊக்கப்படுத்தி, தமிழீழத்தில் ஒரு சாதனை மாணவியாக, சாதனைப் பெண்ணாக மாற்றுவோம்.

மற்றுமொரு விடயம் என்னவெனில், எனது மகள் பயிற்சி பெறவென அதிகாலையில் மைதானத்திற்கு செல்வதானாலும் சரி, விளையாட்டுப் போட்டிகளின்போது போட்டிகளில் பங்குபற்றவென எங்கு செல்வதானாலும் சரி, நானும் அவர் கூடச் சென்று உற்சாகப்படுத்துவேன்.

இம்முறை நடைபெற்ற தேசிய மட்டப் போட்டிகளுக்கும் நானும், மனைவியும் சென்று மகளை உற்சாகப்படுத்தியதுடன் அவருக்கு மன மகிழ்ச்சியும், மனநிம்மதியும் ஏற்பட வழி செய்தோம்.

ⓘ **மகளுடன் விளையாட்டரங்கிற்குள் சென்ற உங்கள் மனதுக்கு பிடித்த, பிடிக்காத நிகழ்வுகள் பற்றி...?**

மனதுக்குப் பிடித்ததென்றால், மகளிற்கு பதக்கம் கொடுத்த அந்த கண்கொள்ளாக் காட்சிதான்!

பிடிக்காத, மனதைப் பாதித்த நிகழ்வுகள் என்று கூறப்போனால்...

முதலாவதாக ஒரு விளையாட்டு வீரரை, அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த இலக்கத்தைக் குறிப்பிட்டு அழைக்கும் போது, சிங்கள மொழியிலேயே இலக்கத்தை கூறினார்கள். அடுத்து எங்களனைவரையும் மிகவும் பாதித்த முக்கியமானதொரு விடயம், மகளிற்கு கொடுக்கப்பட்ட பதக்கத்தில் '10வது தேசிய மெய்வன்மைப் போட்டி' என்று சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ⓘ **இது பற்றி அவர்களிடமே கேட்டிருக்கலாமே?**

கேட்டிருக்கலாம்தான். ஆனால், எனக்கோ சிங்களம் தெரியாததுடன், விளையாட்டரங்கிற்குள் சென்ற எம்மை, மைதானத்திற்குள் அனுமதிக்காததும் காரணமாகவிருந்தபடியால் இது பற்றிக் கேட்க முடியவில்லை.

பதக்கத்தில் குறிப்பிட்டிருந்ததைக் கூட, இங்கு வந்த பின்தான் எமக்குத் தெரிந்தவர் (சிங்களம் தெரிந்தவர்) கூறி அறிய முடிந்தது.

இவ்வாறு இனியொருமுறை நடக்காமல் தடுப்பதற்கு நான் மட்டுமல்லாமல் என்னைப் போன்ற பலர் இணைந்தால் தடுத்து நிறுத்தலாம் இந்த இன, மொழி வேற்றுமையை.

எதிர்பார்ப்புகளுடன் கூடிய ஆதங்கம் தொனித்தது அவரின் குரலில்.

அடுத்து தாரணியின் தாயாரிடம் உரையாடியபோது...

ⓘ **உங்கள் மகளைப் பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

எனது மகள் விளையாட்டில் மட்டுமல்ல, படிப்பிலும் கெட்டிக்காரி என்று சொல்வது எங்களிற்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. நான் அடிக்கடி அவவிற்கு 'படிப்பில் மட்டும் தனியாகக் கவனத்தைச் செலுத்தாது விளையாட்டிலும் செலுத்த வேண்டும்' என்று கூறிக் கொள்வேன்.

மேலும், எனது மகள் இன்றைய இந்த நிலைக்காக மட்டும் பெருமை பேசப்படும் ஒருவராக இல்லாமல், தொடர்ந்து வரும் நாட்களிலும் மேலும் சாதனைகளைப் படைத்து தமிழீழத்தில் ஒரு சாதனைப் பெண்ணாக வரவேண்டும் என்றுதான் எங்களனைவரினதும் ஆவலும், ஆசையும்!

இப்படியான அவர்களனைவரதும் ஆதங்கம் நிறைந்த பதில்களை மனதினுள் நிறைத்து, அந்த அன்பானவர்களிடமிருந்தும், அன்புத் தங்கை தாரணியிடமிருந்தும் விடைபெற்று வந்தேன்.

---

பயிற்சி முடித்த புதிய அணி பணி செய்யப் புறப்பட்ட போது நிர்மா கண்ணிவெடி மகளிர் அணியின் நிர்வாகப் பொறுப்பாளராகப் பணி புரிந்தார்.

அலை மூன்றில் நாம் ஏறி, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சிக்குள் படை நகர்த்தி எம் பலத்தை பகைவருக்கு உணர்த்திக் கொண்டிருந்த நாட்கள் அவை. களங்கள் அகல விரிந்திருந்தன. பளைப் பகுதியில் கண்ணிவெடி சார்ந்த வேலைகளுக்குப் பொறுப்பாக நிர்மா நின்றார். ஓயாத அலைகள்- 01, 02, 03, 04 எல்லாவற்றிலுமே நிர்மாவின் பங்கு கணிசமாக இருந்தது.

நாங்கள் அமைதியாக இருந்தோம். பகைவரோ பரபரப்பாக இருந்தனர். ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை நான்கு மாதங்கள் வரை பொறுமையாக நீடித்தோம். பகைவரோ போர் நிறுத்த மீறல்களிலேயே காலத்தை நீடித்தனர். போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த அந்த நாளில், பகைவரின் பெரும் எடுப்பிலான முன்னேற்ற நடவடிக்கையைத் தடுப்பதற்குத் தயாராக நாம் நின்றோம்.

அந்நிய நாட்டு நிபுணர்களின் ஆலோசனையோடும், அவர்கள் வழங்கிய ஆயுத, உபகரண உதவிகளோடும் சிறிலங்காப்படைத்தரப்பினர் ஆனையிறவில் சிங்கக் கொடி பறக்கவிடும் கனவோடு செய்த தீச்சுவாலை- 01 படை நடவடிக்கையை எமது பெரும் பலத்தால் மூன்றே நாளில் அணைத்தோம்.

படையினர் பலர் எறிகணைகளாலும் கண்ணிவெடிகளாலும் பெருமளவில் கொல்லப்பட்டதாகவும், காயமடைந்ததாகவும் படை அதிகாரிகள் தெரிவிக்கும் அளவுக்கு, களத்திலே நிர்மாவின் பங்கு பாரியது. இப்படி இப்படியெல்லாம் கண்ணிகளை விதைக்குமாறு எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் தயாரித்த திட்டத்தை, தனது அணியினரை வைத்துச் செவ்வனே செய்து முடித்த நிர்மா,

எறிகணைகளாலேயே எப்போதும் காயமடைகின்ற நிர்மா,

ஷஷஎறிகணைக்கு என்மேல் அவ்வளவு அக்கறை . அதுதான் தேடி வருகிறது''

என்று சிரிக்கின்ற நிர்மாவைத்தேடி அந்த எறிகணை, கடைசி எறிகணை வந்தது.

தீச்சுவாலை- 01 எதிர் நடவடிக்கை வெற்றிகரமாக முடிவடைந்து, அணிகள் மீளமைக்கப்பட்டு, எரிந்த வேலிகளும் சிதைந்த காப்பரண்களும் போராளிகளால் திருத்தப்பட்டுக் கொண்டிருந்த அந்த வேளையில் இந்தச் செய்தி வந்தது.

நிர்மா எங்களோடில்லை.

கிளி. சென்திரேசா மகளிர் கல்லூரி தனது பழைய மாணவியை, ஒரு கூடைப்பந்தாட்ட வீராங்கனையை இழந்தது.

இழப்புக்கள் எப்போதுமே துயரத்தைத் தருபவை. ஆனால் உலகத்தில் எந்த ஒரு நாடும் இரத்தம் சிந்தாமலும், ஈகங்கள் புரியாமலும் விடுதலை பெற்றதில்லை.

எமது தலைவர் அவர்கள் சொல்வது போல்

**மாவீரர்களது அற்புதமான இலட்சியவாழ்க்கை - அவர்களது ஈகங்கள், அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள்- இவை எல்லாவற்றினதும் ஒட்டு மொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கின்றது.**